தமிழ்

# பாலபாரதி

## வகுப்பு ஆறு



# டெலி-மானஸ் ஹெல்ப்லைன்

**Tele MANAS (Tele Mental Health Assistance and Networking Across States)**

**(14416/1800-89-14416)**

தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலி-மானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப் படுகிறது. டெலி-மானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண். மூலம் 24 x 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலி-மானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.

## மனோதர்பன் உதவி

**மனோதர்பன் உதவி எண் : 8448440632** வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப்பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.

இப்பாடநூல் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரா, புனே தயாரித்த பாடத்திட்டம் மற்றும் பாட நிர்ணயத்தின்படி தயாரிக்கப்பட்டு, இந்தப் பாடநூல், இந்நிறுவனத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டது. அரசு தீர்மானம் எண்: அபயாஸ்-2116/(ப்ர எண் 43/16) எஸ்டி-4 நாள் 25/04/2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 19/05/2026 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2026-2027 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்
# பாலபாரதி
## வகுப்பு ஆறு




மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R.Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதினால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி-ஒளி வடிவிலான கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு : 2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம். புனே - 411004.
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம் இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் ஆய்வுக்கழக இயக்குநரின் எழுத்துப் பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக்கூடாது.

## தமிழ் மொழிக்குழு

திருமதி. பானுமதி சங்கர், குழுதலைவர்

திருமதி. கீதா கிறிஸ்டோபர், உறுப்பினர்

திருமதி. சித்ரா ஈலசுப்ரமணியன், அழைப்பு உறுப்பினர்

திருமதி. மரிய வசந்தா சேவியர், அழைப்பு உறுப்பினர்

திரு. டேவிட் கிருபா சுவாமிதாஸ், அழைப்பு உறுப்பினர்

திரு. ஜெரோம் ஜெயசிங், அழைப்பு உறுப்பினர்

திருமதி. சுதா எஸ்தர் செல்வின், அழைப்பு உறுப்பினர்

திரு. ரெ. சிவா, சிறப்பு பங்களிப்பு

முனைவர் துலசி பாரத் பூஷண், உறுப்பினர் - செயலாளர் (C.B)

**மறு ஆய்வு:**
திருமதி அனிதா டேவிட் பால் (மதிப்பாய்வு)
திரு. எஸ். ஏ. கனகராஜ் (சட்ட நிபுணர்)
திருமதி எல். வி. ஜெயஸ்ரீ (CWSN நிபுணர்)

**ஒருங்கிணைப்பு:**
முனைவர் துலசி பாரத் பூஷண்
சிறப்பு அதிகாரி - தெலுகு (C.B)
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் கழகம், புனே.

**அச்சுக்கோர்ப்பு:**
கேசன் லாங்வேஜ் பியூரோ, மும்பை

**காகிதம் :** 70 GSM Creamwove
**பதிப்பு ஆணை எண் :**
**பதிப்பாளர்:**

**அட்டைப் படம்:**
திரு. பட்டு இராமதாஸ் பாக்லே

**படங்கள்:**
திரு. ஸ்ரீநிவாஸ் கண்டூரி

**தயாரிப்பு :**
திருமதி. மித்தாலி ஷித்தப்
I/C முதன்மை அதிகாரி
திரு. இராஜேந்திர பாண்டுலுஸ்கர்
தயாரிப்பு அதிகாரி

**வெளியிடுவோர் :**
திரு. ஹேமந்த் வி. பாபர்
I/C கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் தயாரிப்பு கழகம்,
மும்பை - 400025.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

### இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### பகுதி - IV A

## குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

**குழந்தை நண்பர்களே!**

புதிய கல்வியாண்டு தொடங்கியுள்ளது. உங்கள் கைகளில் உள்ள பாலபாரதி ஆறாம் வகுப்புத் தமிழ் புத்தகத்தைக் கண்டு நீங்கள் அவசியம் மகிழ்வீர்கள்.

பாடப்புத்தகத்தில் உள்ள அனைத்து கவிதைகளைக் கூறுவதிலும் பாடுவதிலும் நீங்கள் ஆனந்தம் அடைவீர்கள். பல்வேறு பாடங்களை, தகவல்களை, கட்டுரைகளை வாசிக்கும் பொழுது உங்களது அனுபவங்கள் நினைவில் வரும். பாடங்கள் மற்றும் கவிதைகளை வாசிக்கும் பொழுது உங்கள் கற்பனை சக்தி பெருகும். ஒவ்வொரு பாடங்களுக்கும் கவிதைகளுக்கும் கொடுக்கப்பட்ட மனம் கவரும் வண்ண நிகழ்வுப் படங்கள் பாடங்களை நன்றாகப் புரிந்து கொள்ள உதவி புரியும். இப் புத்தகம் கற்றலுக்கு மட்டுமின்றி உங்கள் சிந்தனைத் திறன் மற்றும் செயல் திறனை மேம்படுத்தும்.

‘புதிய சொல் கற்போம்’ என்ற தலைப்பின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை மீண்டும் வாசியுங்கள். அதன் பொருளைப் புரிந்து கொள்ளுங்கள. புதிய செ ாற்களைத் தவறின்றி பயன்படுத்தத் தமிழ் மொழியில் உள்ள வெவ்வேறு சொற்களின் அறிமுகம் உதவும். அதனால் தமிழைப் பிழையின்றி உங்களால் பேச முடியும். ‘சிந்திப்போம்! செயல்படுவோம்!’ என்ற தலைப்பில் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் மூலம் பாடத்தை நீங்கள் அதிக அளவில் புரிந்து கொள்ள முடியும்.

சிந்தித்து எழுதுக, கலந்துரையாடுக, எழுதுவோம் வாருங்கள், அறிந்து கொள்வோம், வாசிப்போம் போன்ற செயல்பாடுகளின் மூலம் உங்களுக்கு கற்பனை செய்ய, சிந்திக்க, தகவல்களைப் பெற ஆர்வம் உண்டாகும். புத்தகங்கள், செய்தித்தாள்கள், பலவிதமான கட்டுரைகள் மற்றும் கணினியைப் பயன்படுத்தி தகவல்களைப் பெறும் வழக்கம் ஏற்படும். சொற்களோடு விளையாடுவோம் செயல் மூலம் சொல் வளம் பெருகும். மொழியை அறிவோம் பகுதியின் மூலம் இலக்கணத்தின் அறிமுகம் உங்களுக்குக் கிடைக்கும். இச்செயல்களைச் செய்வதின் மூலம் நீங்கள் சரளமான, தவறற்ற தமிழ் மொழியைப் பேச, வாசிக்க, எழுத கற்றுக் கொள்வீர்கள். வீட்டில், பள்ளியில் நண்பர்களோடு பேசும்பொழுது தமிழ் மொழியைப் பெருமையோடு பயன்படுத்துங்கள். இப் புத்தகத்தோடு நட்பு கொள்ளுங்கள், மனம் ஊன்றி வாசியுங்கள், புரிந்து கொள்ளுங்கள், பேசுங்கள், எழுதுங்கள் மற்றும் மகிழ்வோடு கற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் கல்வி பயணத்திற்கும் தமிழ் மொழியில் உங்கள் முன்னேற்றத்திற்கும் மனப்பூர்வமான வாழ்த்துகள்.

**(அனுராதா ஓக்)**
இயக்குனர்
மகாராஷ்டிரா மாநிலப் பாடநூலாக்கம் மற்றும்
கலைத்திட்ட ஆய்வு கழகம், புனே.

புனே,
தேதி : 1 மே 2026
இந்திய சூர்ய ஆண்டு: 11 வைசாக் 1948
மகாராஷ்டிரா தினம்.

## தமிழ் (முதல் மொழி) வகுப்பு - 6
## கற்றல் திறன் இலக்குகள் மற்றும் கற்றல் விளைவுகள்

| வரிசை எண் | கற்றல் திறன் | கற்றல் விளைவுகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 1.1.1. | கேட்ட மற்றும் படித்த செய்தித்தாள்களில் உள்ள முக்கிய கருத்துகள் மற்றும் செய்திகளின் சுருக்கம் கூறுதல். | 10,25,68 |
| 2. | 1.1.2. | விளம்பரங்களைப் புரிதலுடன் படித்தல் மற்றும் விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தல். | 38,68,77 |
| 3. | 1.2.1. | பரிச்சயமான நபர்களின் நேர்காணல்களைக் கேட்டல். அவர்களின் நேர்காணல்களைத் திட்டமிடல் மற்றும் ஏற்பாடு செய்தல். | 34,38 |
| 4. | 1.3.1. | பொருத்தமான மொழியைப் பயன்படுத்தி சமூக அனுபவங்கள் குறித்து முறைசாரா மற்றும் முறையான கேள்விகளைக் கேட்டல். | 34,38 |
| 5. | 1.4.1. | பல்வேறு நோக்கங்களுக்காக முறைசாரா கடிதங்கள், விளக்கக் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகளை பொருத்தமான பாணியைப் பயன்படுத்தி எழுதுதல். | 10,50,59,63,79, 77,81,84 |
| 6. | 1.5.1. | காட்சி அல்லது ஒளி மற்றும் காணொளிக் காட்சி ஊடகங்களுக்கான தலைப்பு மற்றும் சூழலுக்கு ஏற்ப முழக்க வாக்கியங்கள் செய்திகள் மற்றும் உரையாடல்களை எழுதுதல். | 25,54,59,72, 79, 77,81 |
| 7. | 2.1.1. | வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் காலகட்டங்களில் இருந்து பல்வேறு வகையான இலக்கியங்களின் பண்புகளை அனுபவித்தல் மற்றும் விவரித்தல் (நாட்டுப்புற இலக்கியம் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பேச்சு வழக்கில் உள்ள இலக்கியம்) | 29,51,52,53,54, 55,69, 86,87,93 |
| 8. | 2.2.1. | உவமை, உருவகம், சிலேடை போன்ற சொல் அலங்காரங்களைக் கண்டறிந்து விளக்குதல் மற்றும் எடுத்துக்காட்டுகளைக் கூறுதல். | 17,18,69,70,71, 72,85,86,89 |
| 9. | 2.2.2. | உரையில் உள்ள பழமொழிகள் மற்றும் மரபு வழி சொற்களின் அர்த்தத்தை விளக்கி அவற்றை வாக்கியங்களில் பயன்படுத்துதல். பல்வேறு குறுக்கெழுத்து புதிர்களை தீர்த்தல். | 12,13,14,15,16, 17,71,72 |
| 10. | 2.3.1. | வீடு மற்றும் வட்டாரத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகள் மற்றும் கொண்டாட்டங்கள் பற்றிய தனது சொந்த கற்பனைகளையும் கருத்துகளையும் வாய் மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் வெளிப்படுத்துதல். | 7,10,82,83,84 |
| 11. | 3.1.1. | பெயர்ச்சொற்கள், பெயர்ச் சொற்களின் வகைகள், பதிலிப் பெயர்கள், பதிலிப் பெயர்களின் வகைகள், பெயர் உரிச்சொல் மற்றும் வினை உரிச்சொல், பெயர் உரிச்சொற்களின் வகைகள், வினைச்சொற்கள் மற்றும் வினை வடிவங்கள், எழுத்துப் பிழை விதிகள் பற்றி அறிந்து அவற்றை எழுத்தில் சரியாப் பயன்படுத்துதல். | 9,11,21,22,27, 33,38,39,45,64, 67,71,73,76,78, 82,89 |
| 12. | 3.2.1. | கதைகள், கவிதைகள் போன்ற இலக்கிய வகைகளின் இயல்புகள், பன்முகத்தன்மை, பாணி மற்றும் முக்கிய கருத்துகளை அடையாளம் காணுதல். | 1,4,19,29,51, 60, 61,74,90 |
| 13. | 3.3.1. | தங்கள் சொந்த மொழியில் கதைகள் கவிதைகளை எழுதுதல் | 55,63,67,81,84, 89, 95, 99 |
| 14. | 4.1.1. | பல்வேறு இலக்கிய வகைகளின் புத்தகங்களைப் படித்துச சுருக்கங்களைக் கூறுவது மற்றும் எழுதுவது. | 4,10,21,25,32, 51,55,63,77,89 |
| 15. | 4.2.1. | செயல்திட்டங்களுக்காக, செயல்பாடுகளுக்காக ஆசிரியர்களின் உதவியுடன் குறிப்புப் பொருள்களைக் கண்டறிதல். | 4,10,17,50,62, 68,95 |
| 16. | 4.3.1. | பல்வேறு பருவ இதழ்களில் நடப்பு நிகழ்வுகளை படித்தல் அதுபற்றி தனது கருத்தை வெளிப்படுத்துதல். | 62,63 |
| 17. | 5.1.1. | தமிழ் எழுத்துகளில் உள்ள உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் மற்றும் உச்சரிப்பு பற்றிய அடிப்படைத் தகவல்களை அளித்தல். | 5,11,14,17 |
| 18. | 5.2.1. | பேச்சை மிகவும் உயிரோட்டமாகவும் சுவாரஸ்யமாகவும் மாற்ற உவமை, உருவகம் மற்றும் சிலேடை ஆகிய பேச்சு அலங்காரங்களைப் பயன்படுத்துதல். | 52,56,60,69,85, 89 |
| 19. | 5.3.1. | பல்வேறு மொழி விளையாட்டுகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல். (எ.கா., நகைச்சுவைகள், எழுத்து க்களைத் தலைகீழாக மாற்றுவதன் மூலம் புதிய சொற்களை உருவாக்குதல்.) | 49,51,70,71,72, 94,95 |
| 20. | 5.4.1. | எளிய குறுக்கெழுத்துப் புதிர்கள், சொல் விளையாட்டுகளைத் தானே உருவாக்குதல். | 49,51,71,72,78 |

# ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுக்காக ...

2026 கல்வி ஆண்டிற்கான தமிழ்பாடப்புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு வயதிற்கு ஏற்றவாறும் சிந்தனை திறனுக்கு ஏற்றவாறும் பாடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் செயல்களும் தானாகவே கற்றலை ஊக்குவிக்கும் விதமாக கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களது மொழி வளத்தை மேம்படுத்தவும் மொழி திறன்களை வளர்க்கவும், சிந்தித்து எழுதுக. கலந்துரையாடுக. அறிந்து கொள்வோம் செயல்பாடுகள், வாசித்து மகிழ்வோம் போன்ற பயிற்சி கள் கொடுக்கப்பட்டுள்ளன. மொழியை அறிவோம் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட உரைகளின் மூலம் தமிழ் மொழியின் இலக்கண விதிகளை மாணவர்கள் அறிந்து கொள்ள முடியும். அதன் மூலம் தமிழ் மொழியை பிழையின்றி எழுதவும் பேசவும் முடியும்.

பாடத்திற்கு அப்பால்...

**பட வர்ணனை :** பாட புத்த‘த்தில் உள்ள பாடங்கள், கதைகள், பாடல்கள் இவற்றில் உள்ள படங்களை மாணவர்களை உற்றுநோக்க சொல்லவும். அப்படத்தில் உள்ள கருத்துக்களை, பற்றி கலந்துரையாட சொல்லவும் அவர்கள் மனதில் தோன்றும் கேள்விகளைக் கேட்க கூறவும்

**பாடல்கள் :** பாட புத்தகத்தில் உள்ள கவிதைகளை இசையுடன் தாளத்துடன் பாட மாணவர்களுக்கு வாய்ப்பு தர வேண்டும் பாடல்களில் உள்ள புதிய சொற்களின் பொருளை இணையத்திலோ அகராதியிலோ தேட பயிற்சி தர வேண்டும்.

**பாடங்கள் :** பாடப்பகுதிகளை தனியாகவோ குழுவாகவோ வாசிக்க வாய்ப்புகள் தர வேண்டும் தெளிவான அழகான கையெழுத்தில் எழுதவும் சொற்களை வாக்கியங்களை பத்திகளை பாராமல் எழுதவும் பயிற்சி தர வேண்டும். பாடத்திற்கு அப்பால் மாணவர்கள் தாங்களாகவே கற்றலை ஊக்குவிக்க இணையத்தில் தகவல்கள் தேடவும் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இத்தகவல்களை பெற வேண்டிய உதவிகளை ஆசிரியர்கள் பெற்றோரும் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

**குறிப்பு :** சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுக்கானக் கற்றல்-கற்பித்தல் செயல்பாட்டின் போது சைகை மொழி மற்றும் பிற துணைகற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்கள் தங்களால் இயன்ற வழிகளில் தங்களை வெளிப்படுத்தி கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

# பொருளடக்கம்


| எண் | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தாயின் மணிக்கொடி -மகாகவி பாரதியார் | 1 |
| 2. | உலக யோகா தினம் | 6 |
| 3. | கோழி கூவுது | 12 |
| 4. | சந்தைக்குப் போகலாம் – இ.குழந்தைசாமி | 19 |
| 5. | செய்தித்தாள் | 23 |
| | வாசிப்புப் பகுதி | 28 |
| 6. | குற்றாலக் குறவஞ்சி - திரிகூட இராசப்ப கவிராயர் | 29 |
| 7. | நேர்காணல் | 34 |
| 8. | ஆலு-சாலு | 40 |
| 9 | கோபாலன் தோட்டம் | 46 |
| 10 | விடுகதைகள் | 51 |
| | வாசிப்புப் பகுதி | 56 |
| 11 | நாடு போற்ற வாழ்ந்திட வேண்டும் | 57 |
| 12 | நுண் கதைகள் - நீதிமணி | 60 |
| 13 | இயற்கை என்னும் தீராத புத்தகம் - உதய சங்கர் | 65 |
| 14 | இரட்டுற மொழிதல் காளமேகப் புலவர் | 69 |
| 15 | எலிபெண்டா குகைகள் -ஏ. கே. செட்டியார். | 74 |
| | வாசிப்புப் பகுதி | 78 |
| 16 | தோழிக்குக் கடிதம் | 79 |
| 17 | பெய்ல் போலா | 82 |
| 18 | திருக்குறள் - திருவள்ளுவர் | 86 |
| 19 | பண்டித இரமாபாய் - ஞா. கலையரசி | 90 |
| 20 | அந்தாதி பாடல் - சித்ரா (தொடுத்தவர்) | 93 |
| 21 | சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம் - சரவணன் | 96 |
| | வாசிப்புப் பகுதி | 102 |




# 1. தாயின் மணிக்கொடி

[நமது தேசியக்கொடி மூவண்ணக் கொடி ஆகும். இது நமது நாட்டின் விடுதலை,இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டின் சின்னமாகும். இக்கொடிக்கு மரியாதை செலுத்துவதும் நம் இன்னுயிரை ஈந்து அதை காப்பதும் நமது கடமை ஆகும். இப்பாடல் தேசியக் கொடியின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றதுசி.[

தாயின் மணிக்கொடி பாரீர்-அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் -அதன்
உச்சியின் மேல் வந்தே மாதர மென்றே
பாங்கி னெழுதித் திகழும் -செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!

பட்டுத் துகிலென லாமோ?-அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித்தாலும்-அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம்

கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் -எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியரவ் வீரர்-தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார்.

சேர்ந்ததைக் காப்பது காணீர் -அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !
தேர்ந்தவர் போற்றும் பரத - நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க!



**கவி/ஆசிரியர் :** இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். இவர் சமத்துவம், சமூக முன்னேற்றம், பெண்விடுதலைக் குறித்து நிறைய பாடல்களை எழுதியுள்ளார். தன் கவிதைகள் மூலம் நாட்டுப் பற்றையும் விடுதலை உணர்வையும் பரப்பியவர். எனவே இவர் 'தேசியக் கவி' என்று அழைக்கப்படுகிறார்.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க :**

1) தேசியக்கவி என்று அழைக்கப்படுபவர் யார்?

2) எதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வேண்டும்?

3) வீரர் எவ்வாறு கொடியினைக் காப்பர்?

4) எந்தெந்த நாள்களில் பள்ளியில் கொடி ஏற்றுவார்கள்?

- **ஒத்த ஒலி உடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக**

1) .......... .......... ..........

2) .......... .......... ..........

3) .......... .......... ..........

- **எடுத்துக்காட்டைப் போல எழுதுக.**

எ-கா: அ+பள்ளி = அப்பள்ளி

| | | |
|---|---|---|
| 1. | இ + பாடம் = | ............................ |
| 2. | அ + புத்தகம் = | ............................ |
| 3. | இ + கடை = | ............................ |

## சிந்தித்து எழுதுக:

1) நம் தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் எவற்றைக் குறிக்கும்?

2) நம் தேசியக் கொடியின் நடுவில் உள்ள சக்கரம் எதைக் குறிக்கிறது?

## பலவுள் தெரிக

1) பட்டொளி வீசிப் __________ பாரீர்.

அ) பணிந்தது ஆ) பறந்தது இ) சுழன்றது

2) காணரும் __________ பெரும் திருக் கூட்டம்.

அ) வீரர் ஆ) தீரர் இ) சிறார்

3) கவிஞர் நாட்டை எதனுடன் ஒப்பிடுகிறார்?

அ) மலர் ஆ) தாய் இ) மலை

- எதிர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக

(இகழ்ந்து, உயர்ந்து, தூற்றும், இறுதி,)

1) தாழ்ந்து x -----------------

2) முதல் x -----------------

3) புகழ்ந்து x -----------------

4) போற்றும் x -----------------

சொற்களை ப் பிரித்து எழுதுக.

1) புயற்காற்று = __________ + __________

2) நல்லுயிர் = __________ + __________

3) கீழ்நிற்றல் = __________ + __________

## சேர்த்து எழுதுக

1) மணி + கொடி = -----------------

2) துகில் + என = -----------------

3) பட்டு + ஒளி = -----------------

## செயல்பாடு

★ உனக்குப் பிடித்த பாரதியார் பாடலை அபிநயத்துடன் வகுப்பறையில் பாடிக் காட்டுக.

## கலந்துரையாடுக

★ நாம் நாட்டிற்காக என்ன செய்யலாம்? குழுவில் கலந்துரையாடுக.

## செயல்திட்டம்

★ இவர்கள் யாரென்று கண்டுபிடித்துப் பெயர்களை எழுதுக.



# மொழியை அறிவோம்.




உயிரெழுத்துகள் மொத்தம் பன்னிரெண்டு அல்லவா! அவற்றை சற்றே ஒலித்துப் பாருங்கள்.

இவ்வெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபாடு இருக்கிறதா?

**அ, இ, உ, எ, ஒ –** குறுகிய ஓசை உடைய எழுத்துகள். இவை **குறில்** எனப்படுகின்றன.

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ –** நெடிய ஓசை உடைய எழுத்துகள். இவை **நெடில்** எனப்படுகின்றன.

## செயல்பாடு

குறில் எழுத்துகளுக்கு ○
நெடில் எழுத்துகளுக்கு □ இடுக.

(1) ஆ பெ நீ த போ சா மு
(2) பலா, மந்தை, வரலாறு

# 2. உலக யோகா தினம்

(உரையாடல்)

[ங்இந்தியாவின் பாரம்பரியக் கலைகளில் யோகா கலையும் ஒன்றாகும். இக்கலை உடலை வலிமையாக வைத்திருக்க மட்டுமின்றி மனதை அமைதிப்படுத்தவும் உதவுகிறது. உலக நாடுகள் அனைத்தும் இதன் நன்மையை கருத்தில் கொண்டு 'உலக யோகா தினம்' கொண்டாடுகிறது.சி]

(ஆசிரியை வகுப்பறைக்கு வருகிறார்)

**ஆசிரியை:** வணக்கம் மாணவச் செல்வங்களே!

**மாணவர்கள் :** வணக்கம், தமிழம்மா.

**ஆசிரியை :** நமது மாநிலத்தின் அனைத்துத் தமிழ்ப் பள்ளிகளுக்கிடையே நடைபெறும் கட்டுரைப் போட்டியில் நமது வகுப்பிலிருந்தும் ஒருவர் கலந்து கொள்ள வேண்டும். எனவே அனைவரும் கட்டுரை எழுதி வாருங்கள். அதிலிருந்து ஒருவரைத் தேர்வு செய்யலாம்.

**தேஜஸ்வி :** சரி அம்மா. தலைப்பு என்ன அம்மா?

**ஆசிரியை :** 'உலக யோகா தினம்' என்ற தலைப்பில் எழுத வேண்டும்.

**மாணவர்கள் :** சரி தமிழம்மா.

(தேஜஸ்வி வீட்டிற்கு வருகிறாள்)

**சைலஜா :** என்ன தேஜஸ்வி, இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாய்?என்ன செய்தி?

**தேஜஸ்வி :** அம்மா, மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் நான் கலந்து கொள்ளப் போகிறேன். அதற்காகக் கட்டுரை எழுத வேண்டும். எனக்கு உதவுங்கள் அம்மா.

**சைலஜா :** சரி, தேஜஸ்வி! என்ன தலைப்பு ... ? சொல் பார்க்கலாம்.



**தேஜஸ்வி :** உலக யோகா தினம்.

**சைலஜா :** சரி, நல்லது. எப்படி எழுத போகிறாய் ?

**தேஜஸ்வி :** நீங்கள் தான் தினமும் காலையில் யோகா செய்வதை நான் பார்க்கிறேனே! அதையே எழுதுவேன்.

**சைலஜா :** நான் என்னென்ன யோகா செய்கிறேன், சொல் பார்க்கலாம்.

**தேஜஸ்வி :** நீங்கள்... சூரிய நமஸ்காரம், தனுராசனம், பத்மாசனம், திரிகோணாசனம், வஜ்ராசனம் எல்லாம் செய்வீர்கள்.

**சைலஜா :** நல்லது. எப்படி தலைப்பு, துணைத் தலைப்பு இட்டு கட்டுரையை எழுதப்போகிறாய்?

**தேஜஸ்வி :** முதலில் ‘உலக யோகா தினம்’ என்ற தலைப்பை எழுதுவேன். யோகா செய்வதின் நோக்கம், யோகாவின் வகைகள், பயன்கள் போன்ற துணைத் தலைப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுவேன்.

**சைலஜா :** சிறப்பு. முயற்சிக்குப் பாராட்டுகள்!
(மறுநாள் வகுப்பு ஆசிரியையிடம்)

**தேஜஸ்வி :** வணக்கம் தமிழம்மா. நான் நேற்று இரவு கட்டுரையை எழுதிவிட்டேன்.

**ஆசிரியை :** கட்டுரையை படித்துக் காட்டு.
**(தேஜஸ்வி கட்டுரையைப் படிக்கிறாள்).**

# உலக யோகா தினம்

**முன்னுரை :** யோகா என்பது பழங்கால இந்திய அறிவியல் சார்ந்த கலையாகும். இதன் பொருள் 'இணைத்தல்' என்பதாகும். இது உடல்,மனம், ஆன்மாவை இணைக்கின்றது. நாம் 2015 ஆம் ஆண்டு முதல் ஜூன் 21 ஆம் நாளை உலக யோகா தினமாகக் கொண்டாடுகிறோம்.

**யோகா செய்வதின் நோக்கம் :** உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பேணவும், நோயில்லாமல் வாழவும் நாம் யோகா செய்கிறோம்.

**யோகாவின் வகைகள் :** யோகாவில் ஆசனங்கள், மூச்சுப் பயிற்சிகள், முத்திரைகள் என பல வகைகள் உள்ளன. சூரிய நமஸ்காரம், சர்வாங்காசனம், வஜ்ராசனம், சிரசாசனம், தனுராசனம்,பத்மாசனம், திரிகோணாசனம் போன்றவை சில முக்கிய ஆசனங்கள் ஆகும்.

**யோகாவின் பயன்கள் :** நாம் யோகா செய்யும்போது நமது இரத்த ஓட்டம் சீராக அமைகிறது. மன அமைதி கிடைக்கிறது. உடல் சுறுசுறுப்பாக இயங்குகிறது.

**முடிவுரை :** நாம் யோகாவை தினமும் முறையாகச் செய்தால் நலம் பல பெறலாம். எனவே மக்கள் அனைவரும் யோகா செய்து அதன் பயனைப் பெற நாம் உதவிட வேண்டும்.

* * * * * * * * * * * *



**ஆசிரியை:** கட்டுரை அருமையாக உள்ளது தேஜஸ்வி, பாராட்டுகள்!

**(தேஜஸ்வி வீட்டிற்கு வருகிறாள்)**

**தேஜஸ்வி:** அம்மா! நீங்கள் சொன்னதை வைத்து நான் கட்டுரை எழுதினேன். எங்கள் ஆசிரியை என்னை பாராட்டினார். என்னை போட்டிக்குத் தேர்வு செய்துள்ளார். நன்றி அம்மா.



## சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. உரையாடலில் பங்கேற்றவர்கள் யார்? யார்?
2. சவிதா எதைப் பற்றி கட்டுரை எழுத விரும்பினாள்?
3. யோகா தினம் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?
4. யோகாவின் வகைகள் யாவை?

- **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. நான் நேற்று யோகா ......................**

அ. செய்கிறேன் ஆ. செய்வேன் இ. செய்தேன்

**2. மாலா இன்று யோகா ......................**

அ. செய்கிறாள் ஆ. செய்வாள் இ. செய்தாள்

**3. அவர்கள் நாளை யோகா. ......................**

அ. செய்வார்கள் ஆ. செய்தனர் இ. செய்கின்றனர்

**4. யோகாவின் பொருள் என்ன? . ......................**

அ. உடற்பயிற்சி ஆ. இணைத்தல் இ. விளையாட்டு

**5. காலை நேரத்தில் உடலைச் சுறுசுறுப்பாக்க எது உதவும்? . ................**

அ. டிவி பார்த்தல் ஆ. யோகா செய்யதல் இ. கைபேசி பயன்படுத்துதல்

## சிந்தித்து எழுதுக

யோகா செய்வதினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

## கலந்துரையாடுக

1. 'யோகாவும் உடல் நலமும்' என்ற தலைப்பில் வகுப்பில் சக மாணவர்களுடன் கலந்துரையாடுக.

## செயல்பாடு

- 'இயற்கை மருத்துவம்' குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
- உன் பள்ளியில் நடைபெற்ற யோகா தின விழா பற்றி அறிக்கை ஒன்று தயார் செய்க.

## செயல் திட்டம்

- கணினியின் உதவியுடன் சூரிய நமஸ்காரத்தின் பல்வேறு படிநிலைகளைக் கண்டு, அவற்றைக் குச்சி ஓவியமாக உங்கள் பயிற்சி ஏட்டில் வரையுங்கள்.



# மொழியை அறிவோம்

- **மெய்யெழுத்துகள் மொத்தம் பதினெட்டு என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா ?**

அவற்றை ஒலிக்கும் பொழுது ஏற்படும் ஓசை வேறுபாட்டைப் பொருத்து அவ்வெழுத்துகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

வலிய ஓசை உடைய எழுத்துகள் வல்லின எழுத்துகள், மெல்லிய ஓசை உடைய எழுத்துகள் மெல்லின எழுத்துகள், இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துகள் இடையின எழுத்துகள் ஆகும். இவ்வெழுத்துகளையும் இவ்வெழுத்துகளைச் சார்ந்த உயிர்மெய் எழுத்துகளையும் முறையே வல்லின,மெல்லின, இடையின எழுத்துகள் எனக் கூறுகிறோம்.




**கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் வல்லின எழுத்துகளுக்கு ○ மெல்லின எழுத்துகளுக்கு △ இடையின எழுத்துகளுக்கு □ இடுக.**

| அன்பரசு | எழிலழகு | மதிவண்ணன் |
|---|---|---|

# 3. கோழி கூவுது

[நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த சொற்கள், சொற்றொடர்களை நாம் மரபுத் தொடர்கள் என்கிறோம். விலங்குகளின் இளமைப் பெயர்கள், ஒலிகள், வாழும் இடங்கள், ஆண், பெண் வேறுபாடுகள் போன்றவற்றைக் குறிக்க மரபுச் சொற்கள் பயன்படுகின்றன.]



**அம்மா:** ஏலே! குமரா! மணி ஏழாச்சு, சேவ கூவி நேரமாச்சு, பள்ளிக்கூடத்துக்கு கௌம்பலயா?

**குமரன் :** யம்மோய்... ராத்திரி தானே பசு கன்னு போட்டுச்சு. இன்னைக்கு ஒரு நாள் லீவு போட்டுக்கிறேனே...

**அம்மா :** சீம்பால் எடுத்து வச்சிருக்கேன். அத்தை வீட்ல குடுத்துட்டு பள்ளிக்கூடத்துக்கு போலே...

**குமரன் :** போம்மா ... அத்தை வீட்ல நாய் கொலைக்கும்.

**அம்மா :** எலேய் ''கொலைக்கற நாய் கடிக்காது'' தெரியுமா!

**குமரன்:** ஆமா. அப்பா எங்க போனாரு?

**அம்மா :** சாமிக்கண்ணு அண்ணன் கூரை வேயணுமுனு கூட்டிட்டு போனாரு !

**குமரன் :** மத்தியானம் சாப்பிட என்ன வச்சிருக்க?

**அம்மா :** வெண்டைக்கா கொழம்பு, கீரைக்கூட்டு

**குமரன் :** நெதமும் கீரை தானா... போம்மா எனக்குப் பிடிக்கல.



**அம்மா :** கீரை சாப்பிட்டா நல்லது.

**குமரன் :** பரவால்ல போ. நான் கெளம்புறேன்.

அத்தை வீட்டிலிருந்து பள்ளி செல்லும் வழியில் இனியாவைப் பார்த்தான். இனியாவின் தோளில் ஒரு கிளி இருந்தது. அது 'இனியா இனியா' என்று அழைத்தது. குமரன், ‘‘இனியா, உன் கிளி என் பேரச் சொல்லுமா?'' என்று கேட்டுக்கொண்டே பள்ளிக்குச் சென்றான், பள்ளியில் அவன் நண்பன் விமலிடம் தங்கள் வீட்டு மாடு கன்று போட்டதைச் சொன்னான்.



**விமல்:** ஏலே, குமரா! ஆடு குட்டி போட்டா அது ஆட்டுக்குட்டி. பசு குட்டி போட்டா அத மட்டும் ஏன் கன்னுக்குட்டின்னு செ ால்றோம். ஏன்?

**அமலா :** ஆமால்ல ! குட்டிக் கோழிய கோழிக் குஞ்சுன்னு சொல்றோம். கோழிக் குட்டின்னா சொல்றோம்?

**குமரன் :** கோழி குட்டியா போடும்! முட்டை தானே போடும். அதனால் கோழிக்குஞ்சுன்னு பேர் வந்திருக்கும்.

**அப்துல்:** எனக்கு ஒரு சந்தேகம். அப்போ யானை குட்டி போட்டா என்னலே சொல்றது? ஆசிரியர் வகுப்பறைக்கு உள்ளே நுழைந்தார்.

**ஆசிரியர் :** என்ன ஒரே சிரிப்பானியா இருக்கு...

**இனியா :** சார்... ஆடு குட்டி போட்டா ஆட்டுக் குட்டின்னு சொல்றோம்லா.. பசு குட்டி போட்டா ஏன் கன்னுக்குட்டின்னு சொல்றோம்? யானை குட்டியை என்னன்னு சொல்றது?



**ஆசிரியர் :** நம் முன்னோர்கள் தான் இது அத்தனைக்கும் பேர் வச்சிருக்காங்களே.இதைத்தான் மரபுச் சொல்லுன்னு சொல்வாங்க.

**விமல் :** யானைக்குட்டின்னு சொல்றது தப்பா சார்?

**ஆசிரியர் :** ஆமா. யானைக் கன்று என்பதே சரி. அதுபோலத்தான் சிங்கத்தின் குட்டியை சிங்கக் குருளைன்னு சொல்லணும்... புலிக்குட்டியை புலிப் பறழ்னு சொல்லணும்.

**குமரன் :** சார்.. இனியாவோட கிளி பேசுது. இது மாதிரி குயில் பேசுமா?

**ஆசிரியர் :** குயில் பேசாது... கூவும்.

**குமரன் :** ஆமா சார், அம்மா கூட காலேயில சேவ கூவிருச்சுனு சொல்லித் தான் என்னய எழுப்புவாங்க.

**ஆசிரியர் :** விலங்குகள், பறவைகள் எழுப்புற ஒலிகளுக்கு நம் முன்னோர்கள் பேர் வச்சிருக்காங்க. அதை ஒலி மரபுச் சொற்கள்னு சொல்லுவாங்க.

**மாணவர்கள் :** நன்றிங்க சார். எல்லாத்தையும் நாங்களும் தெரிஞ்சிக்கிட்டோம்.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



### • வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. குமரனை அம்மா எத்தனை மணிக்கு எழுப்பினார்?

2. கண்பார்வை தெளிவாக இருக்க என்ன செய்ய வேண்டும்?

### • எதிர்ச்சொல் எழுதுக.

1) இளமை x________ (2) சிரிப்பு x________

3) காலையில் x________ (4) சந்தேகம் x________

- **இணைக்கவும்**

| விலங்குகள் | ஒலிகள் |
|---|---|
| புலி | முழங்கும் |
| சிங்கம் | பிளிறும் |
| யானை | உறுமும் |
| குதிரை | ஊளையிடும் |
| நரி | கனைக்கும் |

- **முதலெழுத்தை மாற்றி புதிய சொற்களை உருவாக்குக**

1. பட்டம்　　2. ஆப்பம்　　3. தாளம்

- **இரு தொடர்களையும் இணைத்து ஒரே தொடராக்குக**

(எ-டு) குளம் வெட்டினார். நீர் வளம் பெருகியது.

குளம் வெட்டியதால் நீர் வளம் பெருகியது.

1. குதிரை வேகமாக ஓடியது. கோட்டை கடந்தது.
2. பூக்கள் மலர்ந்தன. மணம் வீசியது.
3. பசி எடுத்தது. உணவு உண்டேன்.

- **பெட்டியில் உள்ள எழுத்துகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்தி எழுதுக.**




வல்லினம் ____________

மெல்லினம் ____________

இடையினம் ____________

● **பழமொழியை நிறைவு செய்க.**

1. அகத்தின் அழகு ____________ தெரியும்.
2. விளையும் பயிர் ____________ தெரியும்.
3. சித்திரமும் கைப் பழக்கம் ____________ நாப் பழக்கம்.

● **பேச்சு வழக்குச் சொற்களுக்குச் சரியான எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.**

கொழம்பு, வீட்ல, கெளம்பலையா, சிரிப்பானியா, சேவ, கொலைக்கும்.




**கட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்கவும்.**

1) .............
2) .............
3) .............

**சிந்தித்து எழுதுக.**

1. குமரன் பள்ளிக்கு ஏன் விடுமுறை எடுக்க ஆசைப்பட்டான்?
2. அத்தை வீட்டுக்குப் போக குமரன் ஏன் அஞ்சினான்?
3. உன் வீட்டில் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி யார், யார் பேசுவார்கள்? அவர்கள் பேசுவது உனக்குப் புரியாவிட்டால் என்ன செய்வாய்?

**கலந்துரையாடுக**

★ **மரபுச் சொற்கள் என்று நாம் எதை கூறுகின்றோம்?**

**குழுச் செயல்பாடு**

★ **ஒவ்வொரு குழுவும் 5 விலங்குகளைத் தேர்வு செய்து அதன் இயக்கம், ஒலி ஆகியவற்றை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.**

## செயல் திட்டம்

★ உங்கள் சுற்றுப்புறத்தில் மக்கள் பேசும் வட்டார வழக்கு சொற்களை உற்று கவனித்து, அதைத் தொகுப்பேட்டில் எழுதவும். அதற்கு இணையான எழுத்து வழக்கு சொற்களையும் எழுதவும்.

# மொழியை அறிவோம்

**கீழே உள்ள சொற்களை வாசியுங்கள்!**

**கடல், கட்டம், கருவி, கரும்பு**

இச்சொற்களில் முதல் எழுத்துகள் ஒன்று போல அமைந்துள்ளன. இவை மோனைச் சொற்கள் எனப்படும்.

**நண்டு, வண்ணம், கண்ணாடி, தண்ணீர்**

இச்சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் இரண்டாம் எழுத்துகள் ஒன்றுபோல் அமைந்துள்ளன. இவை எதுகைச் சொற்கள் எனப்படும்.

செய்யுள் மற்றும் பாடங்களில் ஒலி இன்பத்தைப் பெருக்க எதுகை, மோனை சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## செயல்பாடு

கீழேயுள்ள திருக்குறளை வாசித்து அதில் உள்ள மோனை, எதுகை சொற்களைக் கண்டறிந்து எடுத்து எழுதுக.

**கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.**

எதுகை சொற்கள்: → ______ → ______ → ______

மோனை சொற்கள்: → ______ → ______ → ______



# 4. சந்தைக்குப் போகலாம்.

[பெருநகரங்களில் மக்கள் வீட்டுக்குத் தேவையானப் பொருள்களை வாங்குவதற்கு வணிக வளாகத்தை நாடிச் செல்வார்கள். கிராமப்புறங்களில் மக்கள் தங்களுக்குத் தேவையானதை வாங்க சந்தைக்குச் செல்வார்கள். இப்பாடலின் மூலம் சந்தையில் கிடைக்கும் பொருள்கள் பற்றி அறிந்து கொள்வோமா.]




எங்க ஊரு சந்தையிலே
எல்லாம் கிடைக்குது!
அங்கங்க கடைகளெல்லாம்
அழகாய் இருக்குது!

காய்கறிகள் விற்கும் சத்தம்
காதைப் பிளக்குது!.
தாய்மார்கள் அழைக்கும் குரலும்
தமிழில் ஒலிக்குது!

பாத்திரங்கள் விற்கும் கடை
பக்கம் இருக்குது!.
பலகாரக் கடையும் கூட
பார்க்க இழுக்குது!

பஞ்சு மிட்டாய் விற்கும்
தாத்தா அங்கே நிற்கிறார்!
பாசமுடன் நம்மைத் தானே
வாங்க அழைக்கிறார்!
அம்மா கையைக்
கெட்டியாகப்
பிடித்து நடக்கணும்!
அவசியமா சந்தை
அழகைப்
பார்த்துத் திரும்பணும்!

**கவி/ஆசிரியர் :**

இப்பாடலின் ஆசிரியர் இ. குழந்தைசாமி, அரசுப் பள்ளி ஆசிரியர். இவர் தஞ்சாவூரைச் சார்ந்தவர். இவர் குழந்தைகளுக்கானப் பாடல் நூல்களை எழுதியுள்ளார்



## சிந்திப்போம் செயல்படுவோம்!

- **எழுதுவோம் வாருங்கள்!**

1. சந்தைக்கு நீ சென்ற அனுபவத்தைப் பற்றி எழுதுக.
2. சந்தையில் என்னென்ன பொருள்கள் கிடைக்கும்?
3. சந்தைக்குப் பதிலாக வேறு எந்த நிறுவனங்கள் உள்ளன?

### பலவுள் தெரிக.

- ''காதைப் பிளக்குது'' என்றால் என்ன? ------------------------------

அ. மெதுவான சத்தம்    ஆ. அதிக சத்தம்    இ. இனிமையான சத்தம்

- **இப்பாடலில் உள்ள எதுகை, மோனை சொற்களை எடுத்து எழுதுக.**

**மோனை சொற்கள்:** ................, ................, ................

**எதுகை சொற்கள்:** ................, ................, ................

### சிந்தித்து எழுதுக

- சந்தை என்றால் என்ன?
- பேரங்காடிக்கும், சந்தைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

## குழுச் செயல்பாடு

- சந்தையின் உள்ளே ஏன் சத்தம் அதிகமாக இருக்கிறது? என்பதற்கான காரணங்களை கலந்துரையாடி, கட்டுரை ஒன்று எழுதுக.
- 'சந்தைக்குப் போகலாம்' என்ற பாடலைக் குழுவாக அபிநயத்துடன் பாடவும்.

## செயல் திட்டம்

- பல கடைகள் வைத்து மக்கள் பொருள் வாங்குவது போல சந்தையைக் காட்சிப்படுத்தவும்.

## மொழியை அறிவோம்



இவன்



அவன்

பெயர்களைச் சுட்டிக்காட்ட அவன், இவன், அது, இது என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை சுட்டுப்பெயர்கள் எனப்படுகின்றன.

### சுட்டுப்பெயர்களின் வகைப்பாடு

| அண்மைச் சுட்டு | சேய்மைச் சுட்டு |
| --- | --- |
| இவன், இவள், இது<br>இவர்கள், இவை | அவன், அவள், அது<br>அவர்கள், அவை |

## மற்றொரு வகைப்பாடு

| அகச்சுட்டுப் பெயர்கள் பிரித்தால் பொருள் தராது | புறச்சுட்டுப் பெயர்கள் பிரித்தால் பொருள் தரும் |
|---|---|
| அ+ வள்<br>இ+ வள் | அ+மரம் = அம்மரம்<br>இ+வீடு - இவ்வீடு |

- **கீழ்க்காணும் சொற்களை அகச்சுட்டு புறச்சுட்டு என வகைப் படுத்தவும்.**
  **(இவ்வழி, அது, இவன், அந்தப் பள்ளி, அவர், அக்கண்ணாடி)**

**அகச்சுட்டு :** ____________ , ____________ , ____________

**புறச்சுட்டு :** ____________ , ____________ , ____________

- **ஏதேனும் ஒரு தலைப்பில் உனக்குப் பிடித்த கவிதை ஒன்று எழுதுக.**

**எ-கா:** மும்பைக்குப் போகலாம் ....,

மும்பைக்குப் போகலாம் கண்ணம்மா -வாடி
மும்பைக்குப் போகலாம் கண்ணம்மா
முல்லை மலர் சூடி முத்து மாலை அணிந்து
மும்பைக்குப் போகலாம் கண்ணம் மா ....

- **உனக்குப் பிடித்தக் கவிதை ஒன்றின் காணொளி காட்சி அமைப்பை உருவாக்கி வகுப்பில் காட்டுக.**



# 5. செய்தித்தாள்



[இன்றைய நவீன உலகில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக செய்திகளை நாம் பல ஊடகங்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். இவை யாவற்றிலும் மேலானது செய்தித்தாள் என்னும் ஊடகமே. கருத்தூன்றி செய்திகளை வாசிப்பதன் மூலம் அவை நம் சிந்தையில் என்றும் நிலைக்கும்.]




## இரண்டு பேரின் உயிரைக் காப்பாற்றிய பதினொரு வயது சிறுவன் ஆரோமல்!

**கேரளா-கொல்லாயில்:** இது ஓர் உண்மையான நிகழ்வு. வீரதீரச் செயல்களைச் செய்ய வயது ஒரு தடை இல்லை என நிரூபித்தான் ஆரோமல். பதினொரு வயது சிறுவன் ஆரோமல் எஸ். எம் கேரளத்தைச் சேர்ந்தவன். இவன் 14 அடி ஆழமுள்ள குளத்தில் தவறி விழுந்த, அவனைவிட வயதில் மூத்த இரு பெண்களை, துணிவுடன் நீரில் குதித்து காப்பாற்றி உள்ளான். இதற்காக அவனுக்கு 'பாபு காய்தானி' விருது வழங்கப்பட்டது. கேரளாவில் கொல்லாயில் கிராமத்தில் வசித்து வந்தவர் சுபா (வயது 32). அவருடைய அண்ணன் மகள் ஆர்யா (வயது 16). ஓணம் தினத்தன்று ஆர்யா தன் அத்தை வீட்டிற்கு வந்திருந்தாள். ஆர்யாவும் சுபாவும் துணி துவைக்கக் குளத்திற்குச் சென்றனர். ஆர்யா குளத்தில் தவறி விழுந்தார். சுபா ஆர்யாவைக் காப்பாற்ற குளத்தில் குதித்தார். குளம் 14 அடி ஆழமாக இருந்ததால், அவரால் காப்பாற்ற முடியவில்லை. இருவரும் கையை மேலே தூக்கியவாறு அலறினர்.

சுபாவின் மகள் 'காப்பாற்றுங்கள்' என கத்தினாள். அந்தச் சமயத்தில் அவ்வழியே சென்ற ஆரோமல் என்ற 11 வயது சிறுவன் சற்றும் தயங்காமல்

குளத்தில் குதித்து அவர்களைக் காப்பாற்றினான். இரண்டு உயிர்களைக் காப்பாற்றிய ஆரோமலுக்கு ஓர் ஆபத்தும் நேரவில்லை. ஆரோமல் ஆறு வயதிலிருந்தே நீச்சல் கற்றுக் கொண்டிருந்தான்.அதனால் அவனைவிட வயதில் மூத்த வலிமை உள்ளவர்களையும் அவனால் காப்பாற்ற முடிந்தது. இவனது இந்த வீரச்செயல் பற்றியச் செய்தி நாடு முழுவதும் பரவியது. இந்தியக் குழந்தைகள் நலக் குழுமம் மற்றும் இந்திய அரசும் இணைந்து வழங்கும் 'பாபு காய்தானி' விருது இவனது வீரத்தைப் பாராட்டி 2016 ல் வழங்கப்பட்டது. சிறுவயது முதலே துணிவு, தைரியம், பிறருக்கு உதவும் குணம் வேண்டும் என்பதை இந்நிகழ்வு மூலம் நாம் அறியலாம். நமக்காகப் பல செயல்களைச் செய்வதைவிட பிறருக்காக ஓர் உதவி செய்வது நன்மையாகும். அதுவே மனிதத் தன்மை. இத்தகைய மனித நேயத்துடனும் துணிவுடனும் செயல்பட்ட ஆரோமல் எஸ். எம்மை நாமும் பாராட்டுவோம்!

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



### • வினாக்களுக்கு விடையளிக்க.

1. 'பாபு காய்தானி' விருது யாருக்குத் தரப்பட்டது?
2. அந்தச் சிறுவன் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவன்?
3. ஆபத்தில் இருப்பவர்களைக் காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும். இந்தக் கூற்றைப் பற்றிய உனது கருத்தை எழுதுக.

### • சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பாபு காய்தானி விருது எதற்காகத் தரப்படுகிறது?**

அ. அறிவுக்கூர்மை ஆ. வீரதீரம் இ. விளையாட்டு

**2. ஆரோமல் என்ற சிறுவனின் வயது ____________________**

அ. ஏழு ஆ. ஒன்பது இ. பதினொன்று

### • உரையாடலை நிறைவு செய்க.

**தந்தை : புத்தகங்களை எங்கே எடுத்துச் செல்கிறாய்?**

கவியரசு : ------------------------------------

தந்தை : ------------------------------------

- **சொற்றொடரில் அமைத்து எழுதுக**

1. துணிவு 2. விருது 3. மனித நேயம்

- **எடுத்துக்காட்டைப் போன்று சொற்களைச் சேர்த்து எழுதுக**

(எ-டு) வீரம் + செயல்= வீரச்செயல்

1. மொழி + கல்வி = -----
2. இரும்பு + தூண் = -----
3. செய்தி+ தாள் =-----

- **பொருத்தமானச் சொற்களால் கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. மாணிக்கம் நாளை ஊருக்குப் ________________ (போ)
2. மல்லிகா இன்று பள்ளியில் ________________ (படி)
3. கலைவாணன் நேற்று திரையரங்கம் ________________ (செல்)
4. நான் அடுத்த மாதம் சென்னைக்குச் ________________ (செல்)

## செயல்பாடு

★ **குழுவாகக் கலந்துரையாடி உங்களுள் யாரேனும் பிறருக்கு உதவிய நிகழ்வை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.**

★ **செய்தித்தாள் தலைப்புகளை வாசித்தல்.**

★ **வாசித்தச் செய்திகளின் தலைப்பு, துணைத்தலைப்பு பற்றி நண்பர்களோடு கலந்துரையாடுக.**

★ **நீ படித்த கதை ஒன்றை ஒலி- ஒளி காட்சியாக மாற்றி எழுதுக.**

## அனுபவப் பகிர்வு

நீங்கள் பிறருக்கு உதவிய நிகழ்வை வகுப்பறையில் பகிருங்கள்.

தகுந்த சொற்களைக் கொண்டு நிகழ்வை நிறைவு செய்க.
(தேடி, மைதானத்திற்கு, பெய்தது, நழுவிய. ஓடி, விளையாட)

ஞாயிற்றுக் கிழமைகளில் நான் ...... செல்வேன். அன்றொரு நாள் நானும் என் தம்பியும் விளையாட ...... சென்ற போது திடீரென மழை ...... நாங்கள் ஓடி வந்தோம்.----- வந்ததில் என்னுடைய செருப்பு நழுவி விட்டது. அதைத் --- சிறிது நேரம் அங்கும் இங்கும் பார்த்தோம்.------- செருப்பு கிடைத்தது.

## அறிந்து கொள்வோம்

**இரயில் விதிகளைப் பின்பற்றுவோம்! பாதுகாப்பாக இருப்போம்!**

அன்பும் சிவாவும் ஏற வேண்டிய ரயிலுக்கு இன்னும் பத்து நிமிடங்களே இருந்தன. இரயில் நிலையத்திற்குத் தாமதமாக வந்த அவர்கள் இருவரும் அவசரமாக மற்றொரு நடைமேடைக்குச் சென்றனர்.

**அன்பு:** ஏய்....நமது ரயில் அந்த நடைமேடையில் வந்துவிட்டது!

**சிவா:** மீண்டும் அங்கே செல்ல ரொம்ப நேரம் ஆகுமே!

**அன்பு :** அதோ...பார்! நாம் அவர்களைப் போல போய் விடலாமா?

**சிவா :** (இரயில் தண்டவாளத்தைக் கடக்கும் மக்களைப் பார்த்து) நாமும் அதுபோல ரயில் தண்டவாளத்தை கடக்க வேண்டும் என்று நினைக்கிறாயா?

**அன்பு :** நாம் என்ன செய்வது? நேரமில்லையே (ஓரமாக நின்று கொண்டிருந்த தாத்தா இருவர் பேசுவதையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்).

**தாத்தா :** பாபு அந்த அறிவிப்புப் பலகைகளைப் பார். கொஞ்சம் தாமதமாக வருவது பரவாயில்லை, உங்கள் உயிரை பணயம் வைக்காதீர்கள்! பாலத்தைப் பயன்படுத்துங்கள்!




**சிவா :** ஆம் நாம் அவ்வாறு கடக்க வேண்டாம்.

**அன்பு :** நம் ஆசிரியர்களும் இது போன்ற காரியங்களைச் செய்ய வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். நன்றி, தாத்தா. (நன்றி சொல்லிவிட்டு பாலத்தின் படிகளில் ஏறி மறு நடைமேடையை அடைந்தார்கள்.)

# மொழியை அறிவோம்

வினைச்சொல் என்பது ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல் ஆகும். இச்சொல்லின் வகைகளைக் கற்றுக் கொள்வோம். வினைச்சொல்லை வினைமுற்று, எச்சவினை என இரு முக்கிய பிரிவாக பிரிக்கலாம்.

1. **வந்தான், ஆடினான் :** இவை செயல் முற்றுப் பெற்றதைக் குறிக்கின்றன. இவை வினைமுற்று என அழைக்கப்படும்.
2. **(அ) ஓடிய குதிரை :** குதிரை என்ற பெயர்ச்சொல்லை கொண்டு முடியும் எச்ச வினை பெயரெச்சம் எனப்படும்.

   (ஆ) ஓடி வந்தான் : ஓடி என்னும் எச்சச் சொல் வந்தான் என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இது வினையெச்சம் எனப்படும்.

★ **கீழ்க்காணும் சொற்களை வினைமுற்று, வினையெச்சம் பெயரெச்சம் என வகைப்படுத்துக.**

(சமைத்தாள், தேடிய, பார்த்தான், ஆடிய, சிரித்து, சென்றாள், அழுத, ஓடி, பாடி)

| வினைமுற்று | வினையெச்சம் | பெயரெச்சம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |



# பாபு காய்தானி விருது



ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவை ஒட்டி 'பாபு காய்தானி' விருது குடியரசுத் தலைவரால் அளிக்கப்படுகிறது. தன் உயிரைப் பொருட்படுத்தாமல், பிற உயிர்களைக் காப்பாற்றும் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு இந்த வீர தீர விருது அளிக்கப்படுகிறது. இந்த விருது இந்தியக் குழந்தைகள் நலக் குழுமத்தால் இந்திய அரசுடன் இணைந்து வழங்கப்படுகிறது. இது தேசிய சிறுவர் வீர தீர விருதுகளின் ஒரு பகுதியாகும்.

'யார் இந்த பாபு காய்தானி?' என்ற கேள்வி உங்கள் மனதில் தோன்றலாம். இவர் மகராஷ்டிரா மாநிலத்தில் உள்ள நாசிக் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவருடைய வீட்டின் அருகே நடந்த தீ விபத்தில் சிக்கிய பல உயிர்களைத் தன் உயிரை பொருட்படுத்தாமல் இவர் காப்பாற்றினார். அது மட்டுமின்றிப் பல விலங்குகளின் உயிரையும்கூட இவர் காப்பாற்றினார். அதனால் தீக்காயங்கள் ஏற்பட்டு உயிரிழந்தார். அவரது தியாகத்தை நினைவு கூர்ந்து ஒவ்வொரு வருடமும் வீர, தீரச் செயல்களைச் செய்த 16 வயது உட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு. 'பாபு காய்தானி' விருது வழங்கப்படுகிறது.



# 6 . குற்றாலக் குறவஞ்சி

[தமிழில் உள்ள இலக்கிய நூல்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் . அவை சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என்பன ஆகும். எண்ணிக்கையில் குறைந்த அளவு பாடல்களை கொண்ட இலக்கிய வகைகளை சிற்றிலக்கியங்கள் என்கிறோம்.]

வானரங்கள் கனிகொடுத்து
மந்தியோடு கொஞ்சும்!
மந்தி சிந்து கனிகளுக்கு
வான் கவிகள் கெஞ்சும்!
கானவர்கள் விழிஎறிந்து
வானவரை அழைப்பர்!
ககன சித்தர் வந்து வந்து
காயசித்தி விளைப்பர்!

தேனருவி திரையெழும்பி
வானின் வழி ஒழுகும்!
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்!
கூனல் இளம் பிறைமுடித்த
வேணி அலங்காரர்
குற்றால திரிகூட மலை
எங்கள் மலையே!



**கவி/ஆசிரியர்:** திரிகூட ராசப்ப கவிராயர் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்றத் தமிழ் புலவர் ஆவார். இவர் திருநெல்வேலி மாவட்டம், தென்காசிக்கு அருகிலுள்ள மேலரகத்தில் பிறந்தவர். இவர் பல இசை நாடக நூல்களை எழுதி உள்ளார்.

**தெளிவுரை:-** குரங்குகள் பல வகையானப் பழங்களைப் பறித்து பெண் குரங்குகளுக்குக் கொடுத்து மகிழ்கின்றன. பெண் குரங்குகள் அவற்றை தின்னும்பொழுது விழும் துண்டுகளைக் கேட்டுத் தேவர்கள் கெஞ்சுகின்றனர். குறவர்கள் தங்கள் கண்குறிப்புகளால் வானில் உள்ள தேவர்களை அழைப்பர். வானில் செல்லும் வல்லமை உள்ள சித்தர்கள் இங்கு மூலிகைச் செடிகளை வளர்ப்பர். தேன் போன்ற இனிமையான நீருடைய மலையருவியின் நீரலை வான் வரை எழும்புகின்றது.இதனால் செம்மையான ஒளிக்கதிரை உடைய சூரியனின் தேர்ச் சக்கரங்களும் குதிரைகளும் வழுக்கி விழுகின்றன. இத்தகைய சிறப்புகளைக் கொண்டது எங்களது குற்றால மலை ஆகும்.

## • பொருள் அறிவோம்.

வானரம் - ஆண்குரங்கு, மந்தி - பெண்குரங்கு, செங்கதிரோன் - சூரியன், பரி - குதிரை, வானவர் - வானுலகில் வாழ்பவர்.



## சிந்திப்போம்! செயல்படுவோம்!

## • வினாக்களுக்கு விடையளிக்க.

1. குற்றாலக் குறவஞ்சி பாடலை இயற்றியவர் யார்?
2. வானரங்கள் மந்திகளுக்கு எவற்றைக் கொடுக்கும்?
3. அருவி நீர் எதுவரை எழும்புவதாகக் கவிஞர் கூறுகிறார்?

★ நண்பர்களிடையே நடைபெறும் உரையாடலை நிறைவு செய்க

செல்வன் : சனிக்கிழமை பள்ளிச் சுற்றுலாவிற்கு நீயும் வருகிறாயா?

கண்ணன்: ---------- ---------- ----------

செல்வன்: சாப்பிட என்ன கொண்டு வருவாய்?

கண்ணன்: -------------- ----------

செல்வன் : -------------- ----------

கண்ணன்: நம் வகுப்பு ஆசிரியையிடம் அனுமதி வாங்கிக் கொண்டு அலைபேசி கொண்டு வருவேன்.

செல்வன்: -------------- ----------

## பலவுள் தெரிக

★ ‘‘வானரங்கள் கனிகொடுத்து கொஞ்சும்’’ - இதன் பொருள் என்ன?

அ. சண்டை ஆ. அன்புடன் பகிர்வு இ. ஓட்டம்

● பாடலின் வரிகளை வாசித்துப் பொருத்தமானப் பொருள் எதுவென்று விடைக்கான எழுத்தைக் கட்டத்தில் எழுதுக.

**1. மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்.** ☐

அ. வானரங்கள் மந்திகளுக்குக் கனி கொடுக்கும்.

ஆ. பெண் குரங்கு சிந்தும் கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்.

இ. மந்திகள் யாருக்கும் பழத்துண்டுகளைத் தராது.

**2. செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்.** ☐

அ. குதிரை கால்கள் வழுகும்.

ஆ. சூரியனின் தேர்ச் சக்கரங்கள் வழுகும்.

இ. சூரியனின் தேர்ச் சக்கரங்களும் குதிரைகளின் கால்களும் வழுகும்.

● இப்பாடலில் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| எதுகை சொற்கள் | |
| மோனை சொற்கள் | |

- விலங்குகளில் ஆண், பெண் மரபுப் பெயர்களை இணைக்க:

| விலங்கு | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| குரங்கு | கடுவன் | பசு |
| மாடு | எருது | பிடி |
| யானை | களிறு | மந்தி |
| ஆடு | கடா | பிணை |
| மான் | கலை | மறி |

## சிந்தித்து எழுதுக

★ இப்பாடல் விவரிக்கும் நிலப்பகுதி எது ?
★ இயற்கையை பாதுகாக்க 5 வழிகளை எழுதுங்கள்.

## செயல்பாடுகள்

★ இப்பாடலை வகுப்பில் குழுவாகப் பாடுக.
★ அருவியின் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.
★ படத்தைப் பார்த்து வர்ணனை செய்து எழுதுக



# மொழியை அறிவோம்

| | |
|---|---|
| 1. சீருடை அணிந்தாள் | சீருடை அணிவித்தாள். |
| 2. படம் வரைந்தான் | படம் வரைவித்தான். |

**ஆசிரியர்:** மேலே உள்ள சொற்றொடர்களைக் கவனியுங்கள். ஏதேனும் வேறுபாடு உள்ளதா?

**மாணவன்:** அணிந்தாள் என்பது அணிவித்தாள் என்றும் வரைந்தான் என்பது வரைவித்தான் என்றும் மாறியுள்ளது.

**ஆசிரியர்:** அதாவது அணிந்தாள் என்பதில் எழுவாய் ஒரு செயலை தானே செய்கிறது. இதைத்தான் தன்வினை என்கிறோம்.

அணிவித்தாள் என்பதில் எழுவாய் ஒரு செயலை பிறர்மூலம் செய்விக்கிறது. இதை நாம் பிறவினை என்கிறோம்.

**மேலும் சில எடுத்துக்காட்டுகளை அறிவோம்:**

| தன்வினை | பிறவினை |
|---|---|
| ஆடினான் | ஆட்டுவித்தான் |
| கற்றார் | கற்பித்தார் |
| உருண்டான் | உருட்டினான் |
| படித்தான் | படிப்பித்தான் |
| திரும்பினான் | திருப்பினான் |
| கட்டினான் | கட்டுவித்தான் |

# 7 நேர்காணல்

விளையாட்டுகளை விளையாடுவது மட்டுமின்றி அதனை நேரிலும் காணொளியிலும் காண்பதும் இன்பம் பயக்கும். வெளி அரங்க விளையாட்டுகளில் ஒன்றான கபடி விளையாடும் வீரரைச் சந்தித்தால் ... என்ன கேள்விகள் கேட்கத் தோன்றும். பாடத்தில் காணலாமா ...?

**(கபடி விளையாட்டில் மாவட்ட அளவில் நடந்த போட்டியில் வெற்றி பெற்ற அத்தை மகனைக் காண பெற்றோருடன் வருகிறான் சிறுவன் கண்ணன்.)**

**கண்ணன் :** வாழ்த்துகள் அத்தான்!

**சுரேஷ் :** நன்றி கண்ணா! வாருங்கள் மாமா, வாருங்கள் அத்தை.

**அத்தை :** வாழ்த்துகள் சுரேஷ்! மாவட்ட அளவில் கபடிப் போட்டியில் உன் அணி வெற்றி பெற்றுள்ளது. மகிழ்ச்சி!

**சுரேஷ் :** நன்றி அத்தை!



**கண்ணன் :** அத்தான்! எனக்கும் உங்களைப் போல கபடி விளையாட ஆசையாக உள்ளது, அதற்கு என்ன செய்ய வேண்டும்?

**சுரேஷ் :** அதற்கு நல்ல உடல் வலிமையும், அறிவுக் கூர்மையும் தேவை. தொடர்ந்து நாள்தோறும் பயிற்சி செய்ய வேண்டும்.

**கண்ணன் :** அவசியம் செய்வேன் அத்தான்! உங்களுக்கு கபடி விளையாட்டில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

**சுரேஷ் :** எனக்கு எப்பொழுதும் குழு விளையாட்டு விளையாட பிடிக்கும்.

**கண்ணன் :** எனக்குக் கபடி விளையாட்டின் விதிகள் பற்றி சொல்லுங்களேன்.



**சுரேஷ் :** ஒவ்வொரு அணியிலும் ஏழு வீரர்கள் விளையாடுவார்கள். மொத்தம் இரண்டு அணிகள் உண்டு. நடுவில் ஒரு கோடு இருக்கும். ஒரு வீரர் கபடி கபடி என்று பாடிக் கொண்டு எதிரணியில் உள்ள ஒருவரைத் தொட்டு திரும்ப வேண்டும்.

**கண்ணன் :** நடுவிலே மூச்சு விட்டால் ... ?

**சுரேஷ் :** கூடாது. மூச்சுப் பிடித்துத் தொடர்ந்து மூச்சு விடாமல் 'கபடி, கபடி' என்று பாடி வர வேண்டும்.

**கண்ணன் :** நடுவிலே மூச்சு விட்டால் ... ?

**சுரேஷ் :** அப்போ நீ அவுட் தான். எதிர் அணியில் நீ யாரையாவது தொட்டுவிட்டால் உங்கள் அணிக்கு ஒரு புள்ளி கிடைக்கும். உன்னை எதிரணியினர் பிடித்து விட்டால் அவர்களுக்கு ஒரு புள்ளி கிடைக்கும்.

**கண்ணன் :** அப்படியானால் எதிரணியினரையும் தொட வேண்டும், என்னையும் யாரும் பிடித்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படியா ....

**சுரேஷ் :** அத்தோடு கபடி கபடி என்று பாடிக்கொண்டே இருக்க வேண்டும், இடையில் மூச்சு விட்டாலும் அவுட் தான். இந்த விளையாட்டில் விதிமுறைகள் மிகவும் முக்கியம். ஒற்றுமையோடு விளையாடினால் வெற்றி நிச்சயம்.

**கண்ணன் :** எனக்கும் நீங்கள் பயிற்சி தருவீர்களா?

**சுரேஷ் :** நிச்சயமாக ...! இன்று மாலையே ஆரம்பிக்கலாம். உன் நண்பர்களோடு மைதானத்திற்கு வா, விளையாடலாம்!

**அப்பா :** உடல் வலிமையாக இருக்கச் சில உடற்பயிற்சிகளும் செய்ய வேண்டும், அல்லவா?

**சுரேஷ் :** ஆமாம் மாமா! ஓடுதல், மூச்சுப் பயிற்சி போன்றவைகளையும் செய்து உடலை வலிமையாக வைத்திருக்க வேண்டும். சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். நல்ல சத்தான உணவும் சாப்பிட வேண்டும்.

**அத்தை :** ஆம், சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்.

**மாமா :** ''நீ தொடர்ந்து பயிற்சிச் செய்து மாநில அளவிலும் தேசிய அளவிலும் விளையாடி வெற்றிகள் பல பெறவேண்டும்'' என வாழ்த்துகிறோம்.

**சுரேஷ் :** மிக்க நன்றி, மாமா.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. சுரேஷ் விளையாடிய விளையாட்டு எது?
2. சுரேஷின் அணி எந்த அளவில் நடந்த போட்டிகளில் விளையாடி வெற்றி பெற்றது?
3. கண்ணன் சுரேஷிடம் என்ன கேட்டான்?
4. உடல் வலிமையாக இருக்க என்ன செய்ய வேண்டும்?
5. கபடி போட்டியின் விதிமுறைகள் யாவை?

- **'யார், யாரிடம்' கூறியது? என எழுதுக.**

1. 'எனக்குக் கபடி விளையாட்டின் விதிகள் பற்றி கூறுங்கள்!
2. இன்று மாலையே ஆரம்பிக்கலாம், உன் நண்பர்களோடு மைதானத்திற்கு வா'.
3. சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்.
4. வெற்றிகள் பல பெற வேண்டும்.

### சிந்தித்து எழுதுக

1. இப்பாடத்திலே அத்தை கூறும் பழமொழி யாது? அதன் பொருள் யாது?
2. கபடி விளையாட்டைப் பற்றி பாடத்தின் மூலம் நீ அறிந்தவற்றை எழுதுக.
3. ''எனக்குப் பிடித்த விளையாட்டு'' - எழுதுங்கள்.

### செயல்பாடு

★ **காணொளியில் நீ எந்த விளையாட்டுப் போட்டிகளை காண விரும்புவாய்? அப்போட்டியில் வர்ணனையாளர் கூறுவது போல நீயும் ஒரு விளையாட்டை வர்ணனை செய்க.**

★ **''விளையாட்டு வாழ்க்கையில் அவசியமா?'' குழுவில் கலந்துரையாடுங்கள்.**

## செயல் திட்டம்

1. புகழ்பெற்ற மட்டைப் பந்து விளையாட்டு வீரர் ஒருவரை சந்தித்தால் அவரிடம் என்ன கேள்விகள் கேட்பாய்? விளக்கப் படத்தை பயன்படுத்துக.

**விளக்கப் படத்தைப் பயன்படுத்தி நேர்காணலை எழுதுக.**

### மட்டைப் பந்து விளையாட்டு வீரர் பெயர்



- ‘ஆட்ட நாயகன்’ விருது பெற்ற ஆண்டு
- சொந்த மாநிலம்
- எடுத்த மொத்த விக்கெட்கள்
- கலந்துகொண்ட போட்டிகளின் எண்ணிக்கை
- எடுத்த மொத்த ஓட்டங்கள்

- **தகுந்த வினாச் சொற்களால் கோடிட்ட இடத்தை நிரப்புக. ( என்ன, எத்தனை, யாருக்கு யார், எவ்வளவு, எங்கே.)**

1. ---------- சாப்பிட விரும்புகிறாய்?
2. ---------- புத்தகங்களை வாங்கினாய்?
3. ---------- தண்ணீர் வேண்டும்?
4. நேற்று ----- சென்றாய்?
5. உன்னுடன் வந்தது ----------?
6. இன்று-------- பால் வாங்கினாய்?

# மொழியை அறிவோம்

● கீழேயுள்ள சொற்களை வாசியுங்கள்

| | | |
|---|---|---|
| நண்டு | நரி | நத்தை |

இச்சொற்களில் உள்ள முதலெழுத்தான ந என்ற எழுத்துக்குப் பதிலாக ண அல்லது ன என்ற எழுத்தைப் பயன்படுத்தக்கூடாது
ஏனெனில் ண ன என்ற எழுத்துகள் சொல்லின் முதலில் வராது.

தமிழ் மொழியில் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகளைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால் நாம் மொழியை பிழையின்றி எழுதலாம்.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்.

★ **உயிரெழுத்துகள் பன்னிரெண்டு மற்றும்**

★ **க, ச, த, ந, ப, ம**-ஆகிய வரிசையில் உள்ள உயிர்மெய் எழுத்துகள்

★ **ஞ, ங. ய, வ**-வரிசையில் சில எழுத்துகள் மட்டும்

## மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

★ **மெய்யெழுத்துகள் பதினெட்டு**

★ **ட, ண, ல, ழ, ள, ன** - ஆகிய வரிசையில் உள்ள உயிர்மெய் எழுத்துகள்

★ **ங, ஞ, ய, வ** - வரிசையில் சில எழுத்துகள், ஆயுத எழுத்துகள்

## மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

★ **ஞ், ண், ந், ம், ய், ர், வ், ழ், ள், ன்**- ஆகிய மெய்எழுத்துகள்

★ **உயிர்மெய் எழுத்துகள்**

## மொழிக்கு இறுதியில் வரா எழுத்துகள்

★ **உயிர் எழுத்துகள், ஆயுத எழுத்து**

★ க், ங், ச், ட், த், ப், ற்- ஆகிய ஏழு மெய் எழுத்துகள்

★ **சில உயிர்மெய் எழுத்துகள்**

# 8. ஆலு-சாலு!

[குழந்தைகளிடம் நற்பண்புகள் வளர கதைகள் ஓர் ஊடகமாக இருக்கின்றன. கதைகளில் வரும் கதாப்பாத்திரங்களின் குணங்கள் மனிதர்களிடையே இருப்பதை நாம் காண்கிறோம். இக்கதையில் அம்மா கொக்கு தன் குஞ்சுகள் இடையே காட்டும் அன்பையும், தாய் சொல்லை மீறினால் ஏற்படும் ஆபத்தான விளைவுகளையும் இக்கதை விளக்குகிறது.]

அம்மா கொக்கின் வருகைக்காகக் கூட்டில் பசியோடு காத்துக் கிடந்தன இரண்டு குஞ்சுகள். அம்மா செல்லமாக அவைகளுக்கு ஆலு, சாலு என்று பெயர் வைத்திருந்தது. ஆலு மூத்தவள். சாலு இளையவன். ‘‘சூரியன் மறைய போகுது, இன்னும் அம்மாவை காணோமே’’ என்று சொல்லியபடியே சாலு கூட்டின் விளிம்பில் ஏறியது. ‘‘சாலு, பார்த்து கவனமாக நில்லு. இறக்கைகளை லேசா விரிச்சு வை’’ என்று பாசத்தோடு சொன்னது ஆலு. பிள்ளைகளின் பேச்சைக் கேட்டபடியே அம்மா கொக்கு வந்தது. அவைகளுக்கு உணவை ஊட்டியது.



அம்மா எப்போ வருவா என்பது போலவே நாளை சூரியன் எப்போ வரும்னு ஆவலா இருக்கு'' சொன்னது சாலு. சாலுவை ஆச்சரியமாக பார்த்தபடி ஆலு கேட்டது, ''தினமும் தான் சூரியன் வருது, போகுது, நாளைக்கு என்ன சிறப்பு?'' ''அது இரகசியம், சொல்லமாட்டேன்'' என்று சிரித்தது சாலு. ''தம்பி, நீ ரொம்ப நல்ல பிள்ளை, சொல்லுப்பா!'' என்று கேட்டது ஆலு.



ஆலு, நேற்று இரவு ஒரு மின்மினி பூச்சியை விரட்டிக்கொண்டு அம்மாவுடன் போனது நினைவிருக்கா? நீ முன்னாடி போயிட்ட. நான் முதல்முறையா பறந்ததால் அம்மா கூடவே வந்தேன். அப்போ அம்மா சொன்னாங்க, ''சாலு, நாளை மறுநாள் காலையில் உன்னையும் அக்காவையும் ஆற்றுக்கு கூட்டிப் போகிறேன். உங்களுக்கான உணவை நீங்களே தேடிப் பழகணும்''. காலை சூரியன் உதிப்பதற்கு முன்னரே இருவரும் எழுந்து விட, அம்மா அவர்களின் இறகுகளை நீவியபடியே, ''ஆலு, சாலு, இப்போது நாம் ஆற்றங்கரைக்குச் செல்லலாமா? என்னுடனேயே வாருங்கள்.'' எனக் கூறி முன்னே பறந்தது.

கீழே மரங்கள், குடிசைகள், மனிதர்கள், விலங்குகள் என்று வேடிக்கை பார்த்தபடியே அம்மாவுடன் ஆலுவும் சாலுவும் பறக்கத் தொடங்கின.

ஆற்றில் பரவலாக நீர் ஓடிக்கொண்டிருந்தது. ''ஆலு, எவ்வளவு தண்ணீர் போகுது, பார்க்கவே அற்புதமா இருக்கு!'' என்று உற்சாகமாய்க் கத்தியது சாலு.

''ஆலு, சாலு அதோ பாருங்கள், அதுதான் நீலு, நீர்க்கோழி. அதோ, அங்கு நீந்தி கொண்டிருப்பது வாலு, வாத்து இதோ நம்மைப் போலவே இருக்கிறதே இதுதான் நாலு, நாரை. இப்படி பல்வேறு உயிர்கள் இந்த ஆற்றை நம்பி வாழ்கின்றன. நிறைய மீன்கள் வரும். அவசரம் வேண்டாம் கவனியுங்கள். பெரிய மீனாகப் பார்த்து வேகமாகக் கவ்விப் பிடித்து விட வேண்டும்'' என்று சொல்லியது அம்மா. சாலு உற்சாக மிகுதியால் கரை பக்கம் சென்றது.

கரைப்பக்கம் செல்வது ஆபத்து. கரையில் நண்டுகள் இருக்கும். மனிதர்களாலும் ஆபத்து வரும்.'' என்று அம்மா எச்சரித்தது.



உற்சாக மிகுதியில் சாலு ஆற்றங்கரையில் இருந்த கற்களைத் தன் அலகால் கிளறியது. நீர்ப்பாம்பு ஒன்று திடீரெனப் பாய்ந்தது. ''அம்மா ...!'' என்று அலறியது சாலு. வேகமாகப் பறந்து வந்த அம்மா, தனது நீண்ட அலகால் பாம்பைப் பிடித்து தூரமாக வீசியது. ''சாலு, பொறுமையாகவும் கவனமாகவும் இரு. கரையின் அருகே செல்லும்போது கவனமாகவே இருக்க வேண்டும். மனிதர்கள் உண்டிவில் வைத்து அடிப்பார்கள். பாம்பு, நண்டு என்று எல்லோரிடமும் கவனமாக இருக்க வேண்டும். கெளுத்தி என்ற ஒருவகை மீன் முள்ளோடு இருக்கும். கவனிக்காமல் விழுங்கி விட்டால் தொண்டையில் குத்தி விடும் தெரியுமா! என்று அன்பாக சொன்னது அம்மா.



## சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

அ. கொக்கு குஞ்சுகளின் பெயர்களை கூறுக.
ஆ. கொக்கைப் போல தோற்றமுடைய வேறு பறவை எது?
இ. சாலு ஆலுவிடம் கூறிய ரகசியம் யாது?
ஈ. கொக்குகளின் முக்கிய உணவு எது?

- **சொல்லகராதியைப் பார்த்து சொற்களின் பொருளைக் கண்டுபிடிக்க:**

அ. விளிம்பு ஆ. ஆச்சரியம் இ. கேலி ஈ. அற்புதம் உ. ஆபத்து

- **கொடுக்கப் பட்ட சொற்களின் எதிர்ச் சொல்லைச் சொற்களுடன் இணைக்க:**




| சொல் | எதிர்ச்சொல் |
|---|---|
| மறைதல் | தொலைவில் |
| நல்ல | முன்னால் |
| அருகில் | தோன்றுதல் |
| பின்னால் | துன்பம் |
| மகிழ்ச்சி | தீய |

- **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உன்னையும் அக்காவையும் ______________ கூட்டிக்கொண்டு போகிறேன்.
2. ஆலு, சாலு இப்போது நாம் ______________ செல்லலாமா?
3. சாலு உற்சாகமாக ______________ கரைப் பக்கம் சென்றது.

## பலவுள் தெரிக

**1. நீங்கள் ஆபத்தான இடத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

அ) கவனிக்க மாட்டேன் ஆ) பெரியவர்களை அழைப்பேன் இ) ஓடுவேன்

**2. ''பொறுமையாக இரு'' - இதை எங்கு பயன்படுத்தலாம்?**

அ) படிப்பில் ஆ) வாழ்க்கையில் இ) அ,ஆ, அனைத்தும்

**3. ஒரு நண்பன் ஆபத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

அ) புறக்கணிப்பேன் ஆ) உதவுவேன் இ) சிரிப்பேன்

- **யார் யாரிடம் கூறியது.**

1. ''தினமும் தான் சூரியன் வருது போகுது''
2. எவ்வளவு தண்ணீர் போகுது!

## சிந்தித்து எழுதுக

★ ஆலுவுக்கும் சாலுவுக்கும் தீங்கு தருபவை எவை என அம்மா கூறினார்?

- **சொற்களுடன் 'ஐ' சேர்த்து எழுதுக.**

**எ. டு: பழம் + ஐ + தின்றான் ⟶ பழத்தைத் தின்றான்**

1. யானை +ஐ + கண்டான் ⟶ ______________
2. பணம் + ஐ + கொடுத்தாள் ⟶ ______________
3. வீடு + ஐ + அடைந்தான் ⟶ ______________

## குழுச் செயல்பாடு

★ ஆலு சாலுவின் அம்மாவாக உன் அம்மா இருந்தால் என்னென்ன அறிவுரைகள் கூறியிருப்பார் எனக் கலந்துரையாடுக.

★ கதையை நாடகமாக நிகழ்த்துங்கள்.

## மொழியை அறிவோம்

**சீதா நன்றாக படித்தாள், அதனால் தேர்வில் வெற்றி பெற்றாள்.**

**ஆசிரியை:** மாணவர்களே! இந்த வாக்கியத்தில் சீதா, தேர்வு என்ன வகைச் சொற்கள்?

**மாணவர்கள்:** பெயர்ச் சொற்கள்

**ஆசிரியை:** படித்தாள், பெற்றாள்

**மாணவர்கள்:** இவை வினைச்சொற்கள்

**ஆசிரியை:** 'நன்றாக' இது வினையின் பண்பைக் கூறுகிறது. இதை உரிச்சொல் எனக் கூறுகிறோம். தேர்வில் (தேர்வு +இல்) என்ற சொல்லில் 'இல்' பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துகிறது. அதனால் இதை 'இடைச் சொல்' என்கிறோம்.

இவ்வாறு, சொல் நான்கு வகைப்படும். அவை

1. பெயர்ச் சொல் 2. வினைச் சொல் 3. உரிச்சொல் 4. இடைச்சொல்

**தகுந்த இடைச்சொல், உரிச்சொல்லைக் கண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. கல்யாணி ------ ரம்யா -------- தேர்வுக்குச் சென்றனர்.
2. அந்த மரம் ------
3. இது ஒரு ------ பூ
4. எனக்கு உடல்நிலை சரியில்லை. ------ பள்ளிக்கு செல்லவில்லை.
5. மேகம் மழை ------- பொழிந்தது.



# 9. கோபாலன் தோட்டம்

[தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் நன்மக்கள் இவ்வுலகில் வாழ்வதனால்தான் மழை பெய்கிறது என்கிறார் ஔவையார். அத்தகைய மனிதர் ஒருவர் செய்த தன்னலமற்ற சேவையைப் பற்றி இப்பாடத்தில் படிப்போம்.]

பெரிய பாளையம் என்ற கிராமத்தில் கோபாலன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கும் அவருடைய மனைவி கொடிமுல்லைக்கும் கால்நடைகளை மேய்ப்பது தான் தொழில் ஆகும். இருவரும் காலையில் கட்டுச் சோற்றை எடுத்துக் கொண்டு ஆடு மாடுகளை மேய்க்க மாஞ்சே ாலைக் காட்டிற்கு அருகில் செல்வர். மாலை வீடு திரும்பித் தங்களது வீட்டு வேலைகளைச் செய்வர்.

கோபாலன் மிகவும் தியாக உள்ளம் கொண்டவர். 'மனிதர்களுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு' என்று நம்புபவர். கோபாலன் தன் பணிகளைச் செய்து கொண்டே பிறருக்குப் பயன்படும் பணிகளைச் செய்வதை தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். அவர் பசுக்களை மேய்க்கக் கொண்டு போகும் இடத்தில் ஓர் அழகான தோட்டத்தை உருவாக்க நினைத்தார்.

அதற்கான செயல்களைத் துரிதமாகச் செய்யத் தொடங்கினார். அவரது மனைவியின் ஆலோசனையையும் ஏற்றுக்கொண்டார். அவர் தினந்தோறும் பசுக்களை மேய்த்துக்கொண்டே ஒரு குளத்தை வெட்டத் தொடங்கினார். கோபாலன் கடப்பாரையால் நிலத்தைத் தோண்ட, அவரது மனைவி மண்ணைக் கூடையில் தூக்கி வரப்பாகப் போடுவார். அவர் கற்களால் வரப்பைக் கட்டும் போது, அவரது மனைவி கற்களை எடுத்துக் கொடுப்பார்.



இவ்விதமாக இருவரும் சேர்ந்து சில ஆண்டுகளில் யாருடைய உதவியும் இன்றி ஒரு குளத்தை உருவாக்கினர். கோபாலன் குளத்தைச் சுற்றி உள்ள இடத்தில் நல்ல கனிகளைக் கொடுக்கும் மரக்கன்றுகளை நட்டார். அவருடைய மனைவி அதற்கு பாத்திகளைக் கட்டினார். அம்மரக் கன்றுகளுக்கு இருவரும் சேர்ந்து வேலி அமைத்தனர்.

மழைக்காலத்தில் குளம் நீரால் நிரம்பியது. அதனால் கோபாலன் ஆண்டு முழுவதும் மரக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சினார். சிறிது காலத்தில் பெரிய பாளையம் மக்களும் தம் கால்நடைகளை மேய்க்க அவ்விடத்தை நாடிப் போகத் தொடங்கினர். அங்கே ஆடு மாடுகளுக்கு வேண்டிய



தண்ணீரும் மேய்ச்சலும் கிடைத்தன. மேய்ப்பர்களுக்கு ஓய்வு எடுக்க தகுந்த நிழல்தரும் மரங்களும் உண்டாகி இருந்தன.

சுற்றுப்புறக் கிராமங்களில் அந்தத் தோட்டம் புகழ் பெற்றது. அத்தோட்டத்தை அனைவரும் 'கோபாலன் தோட்டம்' என்றே பெயரிட்டு அழைத்தனர். மாஞ்சோலைக் காட்டின் அருகிலுள்ள அத்தோட்டம் அக்கிராமத்திற்கு பெருமைத் தேடி தந்தது. கோபாலன் மறைந்து பல ஆண்டுகள் ஆகியும் அவருடைய தொண்டுள்ளத்தை மக்கள் வாயார வாழ்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

கோபாலனுடைய தன்னலமற்ற செயலை பார்த்தீர்களா, மாணவர்களே! அவரைப்போலவே நாமும் பிறருக்கு பயன் தரும் செயலைச் செய்யும் மனப்பான்மையோடு வாழ வேண்டும்.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



### வினாக்களுக்கு விடையளிக்க.

1. கோபாலன் எந்த கிராமத்தில் வாழ்ந்து வந்தார்?
2. கோபாலனின் முக்கியத் தொழில் யாது?
3. கோபாலன் எப்படிப்பட்ட மனிதர்?
4. கோபாலனும் அவரின் மனைவியும் குளத்தை எவ்வாறு உருவாக்கினர்?

### பொருள் அறிக. சொல்லகராதியைப் பயன்படுத்துக.

மைதானம், தொண்டு, சேறு, துணைவியார், வேலி.

### சொற்களைப் பிரித்து எழுதுக.

கட்டுச்சோறு, மாஞ்சோலை, அவ்விடத்தில், முதன்முதலில்

### சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. மரம் + கன்றுகள் 2. மழை + காலங்கள் 3. அ + கிராமம்
4. ஓய்வு + எடுக்கவும் 5. சுற்று + புறம்

● பாடத்தில் உள்ள வார்த்தைகளால் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கோபாலனுக்கும் அவருடைய மனைவிக்கும் ________________ மேய்ப்பதுதான் தொழில் ஆகும்.
2. கோபாலன் மிகவும் ________________.

## பலவுள் தெரிக

1. நீங்கள் கோபாலன் போல இருக்க என்ன செய்வீர்கள்?

அ. எனக்காக வாழ்வேன் ஆ. பிறருக்கு உதவுவேன் இ. ஓய்வெடுப்பேன்

2. உங்கள் கிராமத்தில் நீர் பிரச்சனை இருந்தால் என்ன செய்வீர்கள்?

அ. கவனிக்க மாட்டேன் ஆ. தீர்வு முயற்சி செய்வேன் இ. சண்டை

3. மரக்கன்றுகளை நட்டால் என்ன பயன்?

அ. பயன் இல்லை ஆ. சுற்றுச்சூழல் பாதுகாப்பு இ. சத்தம்

● சொல் சங்கிலியை நிறைவு செய்க.

1. விளக்கு → [ ] → வித்து → [ ]

2. கசப்பு → [ ] → [ ] → விறகு

## சிந்தித்து எழுதுக

★ மேய்ப்பர்கள் ஏன் கோபாலன் தோட்டத்தை நாடி வந்தனர்?

★ 'கோபாலன் தோட்டம்' என பெயர் வரக் காரணம் யாது?

● கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி அருகில் உள்ள கட்டத்தில் எண்களை எழுதுக.

1. அவருடைய மனைவி அதற்குப் பாத்திகளைக் கட்டினார். [ ]
2. இருவரும் சேர்ந்து ஒரு குளத்தை உருவாக்கினர். [ ]
3. கோபாலன் கடப்பாரையால் நிலத்தைத் தோண்டினார். [ ]

4. கோபாலனும் அவரது மனைவியும் ஆடுமாடு மேய்ப்பவர்கள் ஆவர். ☐
5. ஒரு தோட்டம் உருவாக்க நினைத்தனர். ☐
6. நல்ல கனிகொடுக்கும் மரக்கன்றுகளைச் சுற்றிலும் நட்டனர். ☐
7. அழகான தோட்டம் உருவானது. ☐
8. மரக்கன்றுகளுக்கு நாள் தவறாது நீர் பாய்ச்சினர். ☐

## செயல்பாடுகள்

★ **''நாம் ஏன் பிறருக்கு உதவ வேண்டும்?'' - கலந்துரையாடுங்கள்.**

★ **காலையில் சூரியன் உதிக்கும் காட்சியைப் பற்றி சக மாணவர்களுடன் கலந்துரையாடி வருணனை செய்யவும்.**

★ **''நான் ஒரு சமூக சேவகர் என்றால்'' - எழுதுங்கள்**

★ **கோபாலன் தோட்டம் கதையை நாடகமாக நடித்துக் காட்டவும்.**

## செயல் திட்டம்

● **நீர்சேகரிப்புப் பற்றி தகவல்கள் அறிந்து படம் வரைக.**

# 10. விடுகதைகள்

[விடுகதைகள் நமது பண்பாட்டின் அடையாளமாக விளங்குகின்றன. விடுகதைகள் பற்றிய செய்திகளை மேலும் அறிய பாடத்தை வாசிப்போம்.]

விடுகதைகள் பெரும்பாலும் உருவகங்கள் மற்றும் நகைச்சுவை கலந்தவை. இயற்கை நிகழ்வுகளைப் புதிராக மாற்றி அமைக்கப்படுபவை. இவை மிகப் பழமையான வாய்மொழி இலக்கிய வடிவமாகும். நாட்டுப்புற மக்களின் அறிவுத்திறனையும் தொன்மங்களையும் வாழ்வியலையும் இவை பாதுகாத்து வந்துள்ளன.

தொல்காப்பியர் காலத்தில் இருந்தே விடுகதைகள் வழக்கத்தில் இருந்து வந்துள்ளன. அக்காலத்தில் அவை 'பிசி' என்றும் 'நொடி' என்றும் அழைக்கப்பட்டன. தொடக்க காலத்தில் வாய்மொழி இலக்கியமாக இருந்த விடுகதைகள் காலப்போக்கில் எழுத்து வடிவம் பெற்று இலக்கியத்தின் ஓர் அங்கமாக மாறின.

விடுகதைகள் கவிதை வடிவிலோ அல்லது உரைநடை வடிவிலோ அமைகின்றன. கதை விடுகதைகள், உண்மை அல்லது விளக்க விடுகதைகள், கணக்கு விடுகதைகள், நகைச்சுவை விடுகதைகள் என விடுகதைகள் பல வகையாகக் கூறப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை நாம் இங்கு படித்து விடை காண்போமா?

## உண்மை விடுகதை அல்லது விளக்க விடுகதை:

பாட்டி வீட்டு பந்தலிலே பச்சை பாம்பு தொங்குது, அது என்ன?
நான்கு மூலை செவ்வக அறையிலே நாற்பது பேர் உள்ளனர், அது என்ன?
இவ்விடுகதைகளுக்கான விடைகள் புடலங்காய், தீப்பெட்டி ஆகும். நேரடியாகச் சொற்களை விடையாகக் கொண்ட இவ்விடுகதைகள் விளக்க விடுகதைகள் ஆகும்.

## கதை விடுகதை:

தேரிலே படர்ந்த கொடி, தேடி மேலே ஏறும் கொடி.

சிறு பூவால் சிறந்த கொடி, சிறந்த பூ மணக்கும் கொடி. அது என்ன கொடி?

விடை: முல்லைக்கொடி என்பதாகும்.

தன் தேரினை முல்லைக்கொடி படர்வதற்கு கொடையாக அளித்த பாரி வள்ளல் பற்றி இவ்விடுகதை கூறுகிறது.

## கணக்கு விடுகதை:



ஒரு குளத்திலே சில தாமரை மலர்கள் மலர்ந்து இருந்தன. சில வண்டுகள் மலர் ஒன்றுக்கு ஒவ்வொன்றாக அமர ஒரு வண்டிற்கு இடமில்லை. பிறகு அவை மலர் ஒன்றுக்கு இரண்டிரண்டாக அமர ஒரு மலர் மிகுந்து இருந்தது. வந்த வண்டுகள் எத்தனை? இருந்த மலர்கள் எத்தனை?

விடை: மலர்கள் மூன்று, வண்டுகள் நான்கு.

இவ்வாறு விடுகதைகளின் விடைகள் கணக்கினை அடிப்படையாகக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்டதால் அவற்றை கணக்கு விடுகதைகள் என்கிறோம்.

## இலக்கிய விடுகதை:

வெண்பா, ஆசிரியப்பா வடிவிலும், எதுகை மோனை நயங்களோடு உள்ள விடுகதைகள் இலக்கிய விடுகதைகள் எனப்படுகின்றன.

சின்னப் பொண்ணு; சின்னப் பையன்
சிரித்துக் கட்டிய சிட்டான வீடு - அதை
சிக்கல் இல்லாமல் பிரிப்போர்க்கு
சேர நாட்டில் பாதி. - அது என்ன?

**விடை: தூக்கணாங் குருவிக் கூடு என்பதாகும்.**

விடுகதைகள் சொல்லி விடுவிக்கும் செயல்களில் பள்ளி மாணவர்கள் ஆர்வத்தோடு ஈடுபடுவர். பள்ளிகளில் மட்டுமன்றி பொழுதுபோக்கிற்காக வீடுகளிலும், திருமண விழாக்களிலும் விடுகதைகள் கூறும் பழக்கம் நம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளது. உலகளாவிய அளவிலும் விடுகதைகள் கூறி விடுவிக்கும் பழக்கம் இருந்ததாக மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இது மக்களின் சிந்திக்கும் திறன், கற்பனைத்திறன் மற்றும் நுண்ணறிவை வளர்க்க உதவுகிறது. மாணவர்களாகிய உங்களுக்கும் விடுகதைகள் என்றால் பிடிக்கும் தானே?



## சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. விடுகதைகளை நீ எங்கு படித்திருக்கிறாய்?
2. உன் வீட்டில் பாட்டி அல்லது தாத்தா விடுகதைகள் கூறுவதைக் கேட்டிருக்கிறாயா? அவற்றை எழுதுக.
3. விடுகதை என்பது யாது?
4. விடுகதையின் வேறு பெயர்கள் யாவை?

## பலவுள் தெரிக

1. கருப்புப்புல், கனத்த புல், கடித்தால் நன்றாய் இனிக்கும் புல். அது என்ன புல்? ------------

அ. மூங்கில் ஆ. நாணல் இ. கரும்பு

2. சீவிவிட்டால் முக்கண்ணன், முற்ற விட்டால் பழமாவேன், நட்டு வைத்தால் கிழங்காவேன், விட்டுவிட்டால் மரமாவேன். - நான் யார்? -----------

அ. தேங்காய் ஆ. பனங்காய் இ. புளியங்காய்

3. விடுகதைகள் எந்த வகை இலக்கியம்? ---------------

அ. எழுத்து மட்டும் ஆ. வாய்மொழி இலக்கியம் இ. நாடகம்

4. தொல்காப்பியர் காலத்தில் விடுகதைகள் என்ன என்று அழைக்கப்பட்டன?

அ. பாடல் ஆ. பிசி, நொடி இ. கதை

- கீழ்க்காணும் விடுகதைகள் எவ்வகை விடுகதைகள் என எழுதுக.

1. எண்ணெய் இல்லாமல் எரியும் விளக்கு எது?

விடை : ______________



2. ஐந்து கோழிகள் 5 கிண்ணத் தானியங்களைச் சாப்பிட 5 நிமிடம் எடுத்துக் கொள்கின்றன. எனில் 100 கோழிகள் 100 கிண்ணங்களில் உள்ள தானியங்களைச் சாப்பிட எத்தனை நிமிடங்கள் ஆகும்?

விடை : ______________

- **டிஜிட்டல் திரையில் படத்தைப் பார்ப்பேன். விடுகதையை எழுதுவேன்.**
- **அடிக் கோடிட்டச் சொற்களை எவ்வகைச் சொல் என எழுதுக.**

1. மரம் வளர்த்தால் மழை பொழியும். ______________
2. குளிர்நீரால் நீராடுவது சாலச் சிறந்தது. ______________
3. பாரியும் கபிலரும் நண்பர்கள். ______________
4. மான் போலத் துள்ளினாள். ______________

## குழுச் செயல்பாடு

மாணவர்களைக் குழுவாக அமரச் செய்யவும். ஒரு குழு விடுகதைகளைக் கூற மற்றொரு குழு விடையைக் கூற வேண்டும். பின் இரண்டாவது குழு விடுகதைகளைக் கூற முதல் குழு விடைகளைக் கூற வேண்டும். (ஆசிரியர் விடுகதைகள் உள்ள அட்டைகளை மாணவர்களுக்குத் தரவேண்டும்.)

## செயல் திட்டம்

- **விடுகதையின் விடையை ஆசிரியரிடம் அல்லது பெரியோரிடம் கேட்டுக் குறிப்பேட்டில் எழுதவும்.**

★ **நீர் உயர உயரும் பூ. நீரினிலே பூக்கும் பூ, நீ உயர வள்ளுவனார் சான்றாகச் சொன்ன பூ. இவ்விடுகதை சுட்டிக்காட்டும் திருக்குறள் எது?**

★ **புதிய விடுகதைகளை உருவாக்குங்கள்.**

★ **வீட்டில் அருகில் உள்ள பெரியவர்களிடம் விடுகதைகளைக் கேட்டுத் தொகுக்கவும்.**

# வாசிப்புப் பகுதி



**சுலபமாக செய்வோம்! சுவையாக சாப்பிடுவோம்!**




**தேவையான பொருள்கள்:**

அவல் - 1 கிண்ணம்
வெல்லம் - 1 கிண்ணம் (துருவியது / பொடி செய்தது)
ஏலக்காய் - 3 (பொடி செய்தது)
பால் - 3 கிண்ணம் (சூடானது)

**செய்யும் முறை:**

ஒரு பாத்திரத்தில் சூடானப் பாலை ஊற்றுங்கள். அதில் நன்றாகக் கழுவி தண்ணீரை நீக்கிய அவல், துருவிய வெல்லம், ஏலக்காய் தூள் சேர்த்து நன்றாகக் கிளறி அரை மணி நேரம் மூடி வையுங்கள். அவ்வளவுதான். சுவையான அவல் பாயாசம் தயாராகிவிட்டது. எல்லோரும் பகிர்ந்து சாப்பிட்டு மகிழுங்கள்.

**குறிப்பு:** பாலுக்குப் பதிலாக தேங்காய் பாலையும் உபயோகிக்கலாம்.
தேங்காய் பாலைச் சூடு செய்யக் கூடாது.

**இணையம் எனது நண்பன்:** **'கல்யாண சமையல் சாதம்' பாடலைக் கண்டும் கேட்டும் மகிழுங்கள்.**

# 11. நாடு போற்ற வாழ்ந்திட வேண்டும்

[பாரத நாட்டில் பலமொழி பேசும் பல இன மக்கள் வாழ்ந்தாலும் மனத்தால் இந்தியர் என்ற உணர்வால் நாம் அனைவரும் ஒருவரே. ஒற்றுமையாய், ஓரணியாய் நின்று நம் நாட்டின் பெருமையை உலக அரங்கிலே பறைசாற்றிட வேண்டும்.]



தாய் மொழியை என்றும் - நாம்
நேசித்திட வேண்டும்
பிற மொழிகள் யாவும் - நாம்
மதித்திடத்தான் வேண்டும்.

ஒன்று கூடி சீர் சிறப்பாய் -
வாழ்ந்திடத்தான் வேண்டும்.
ஒற்றுமையாய் ஓரணியாய் -
உழைத்திடத்தான் வேண்டும்.

நெகிழிப்பையை நித்தமும் - நாம்
தவிர்த்திடத் தான் வேண்டும்
குப்பைகளை என்றும் - நாம்
குறைத்திடத் தான் வேண்டும்.

உள்ளம் உடல் தூய்மை தனை -
பேணிடத்தான் வேண்டும்.
ஒழுக்கமாக உழைத்து - நாம்
உயர்ந்திடத் தான் வேண்டும்.

வாழ்வில் நற்செயல்களை - நாம்
செய்திடத்தான் வேண்டும்.
நல்ல பல நூல்களை - நாம்
கற்றிடத்தான் வேண்டும்.

நாடு போற்றும் நல்லோர் - வழி
நடந்திடத்தான் வேண்டும்.
நானிலத்தில் பாரதத்தை தலை
உயர்த்திட வேண்டும்!

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. நாம் எதை நேசிக்க வேண்டும்?
2. எதை நாம் தவிர்த்திட வேண்டும்?
3. எவ்வகையான நூல்களைக் கற்றிட வேண்டும்?
4. எதைக் குறைக்க வேண்டும் என கவிஞர் கூறுகிறார்?
5. ஊக்கத்தோடு உழைத்தால் எதைச் சாதிக்கலாம்?

- **பாடலில் இருந்து பொருத்தமான எதிர்ச்சொல்லைத் தேடி எழுதுவோம்.**

**1. தூய்மையின்மை**

அ. ஒழுக்கம் ஆ. பசுமை இ. சுத்தம்

**2. தீயோர்**

அ. நல்லோர் ஆ. ஒழுக்கமுடைமை இ. சுத்தம்

**3. வேற்றுமை**

அ. பண்புடைமை ஆ. பொறுமை இ. ஒற்றுமை

- **சொற்களுடன் 'கு' சேர்த்து எழுதுக.**

**எ.டு: தம்பி +கு + தந்தான் → தம்பிக்குத் தந்தான்**

1. கடை + கு + சென்றான் → ..............................
2. ஏழை + கு + கொடுத்தான் → ..............................
3. விடுதலை + கு + பாடுபட்டார் → ..............................
4. தூய்மை + கு + அவசியம் → ..............................
5. கல்வி +கு + தேவை → ..............................

## சிந்தித்து எழுதுக

★ குப்பைகளைக் குறைக்க நீங்கள் என்ன செய்வீர்கள் ?

## கலந்துரையாடுக

★ ஈரக்குப்பை, உலர் குப்பை இவற்றை எவ்வாறு வகைப்படுத்துவாய்? என வகுப்பறையில் உன் நண்பர்களோடு கலந்துரையாடுக. அதன் முடிவை அறிக்கையாக எழுதி ஆசிரியரிடம் கொடுக்கவும்.

★ ‘‘நான் தினமும் செய்யும் நல்ல செயல்கள்’’ கலந்துரையாடுங்கள்.

## செயல்பாடு

★ வகுப்பில் ஒரு நாள் ‘நெகிழி இல்லா நாள் [Plastic-free day] கடைப்பிடிக்கவும்.

● **பின்வரும் சொற்களை பெயர்ச்சொல், வினைச்சொல் என வகைப்படுத்துக.**

சொற்கள் :- நெகிழி, உழைத்தல், உடல், மதித்தல், உள்ளம், நேசித்தல்,

**பெயர்ச்சொற்கள் வினைச்சொற்கள்**

● **மயில் படம் வரைந்து குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுக.**

**தேசியப்பறவை - கழுத்து - தோகை - ஆண்மயில் - உணவு.**

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

# 12. நுண் கதைகள்
**(நீதிமணி)**

[இன்றைய நவீன காலத்தில் வாசிப்பவரின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, மிகக் குறைந்த வரிகளில் மனதைக் கவரக் கூடிய வகையில் கதைகள் எழுதப்படுவதே நுண்கதைகள் ஆகும்.]

## மூச்சால் வளர்ந்த பூக்கள்

பலூன் ஒன்று வாங்கினேன். அது பூ போட்ட பலூன், அந்த பலூனில் இருந்த பூக்கள் வாடி போயிருந்தன. நான் பலூனை ஊதினேன். ஊத, ஊத பலூன் பெருத்தது. பலூன் மினுமினுத்தது. முன்பு வாடிப் போயிருந்த பூக்கள் இப்போது மலர்ந்திருந்தன.



## காற்று வரைந்த வட்டம்





நான் ஒரு காற்றாடி வாங்கினேன். அதற்கு இரண்டு இறக்கைகள் இருந்தன. அது எனக்குப் பார்ப்பதற்கு நான்கு ஆரக்கால்களாகத் தெரிந்தன. காற்றாடியை உயர்த்திப் பிடித்தேன். காற்றில் காற்றாடி சுழன்றது. காற்றாடி சுழல சுழல ஒரு வட்டம் உருவானது. ஆரக்கால்கள் வைத்து நான் ஒரு வட்டம் வரைவேன் என்றது காற்று.

## பப்பாளி மரத்தின் கைகள்



தோட்டத்தில் ஒரு பப்பாளி மரம் இருந்தது. பப்பாளி மரத்தின் இலையும் அதன் தண்டும் மனிதர்களின் கைகளைப் போல் இருக்கும். ஒரு மனிதன் கைகளை நீட்டி விரல்களை விரித்து உள்ளங்கையைக் காட்டுவது போல் தோன்றும். இப்படி பல கைகளைக் கொண்டது பப்பாளி மரம். ஒரு சிறுமி அந்த பப்பாளி மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிறகு பக்கத்தில் இருக்கும் தோழியிடம் சொன்னாள். ''காய்ப்பதற்கு முன் இந்தப் பப்பாளி இலைகள் எப்படி இருந்தன தெரியுமா? வெறும் கையைக் காட்டி கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை'' என்று சொல்வது போல் இருந்தது. ''காய்த்த பிறகு?'' தோழி கேட்டார். ''கொடுப்பதற்கு என்னிடம் எவ்வளவு பழங்கள் இருக்கின்றன, பார்த்தாயா?'' என்று கைகளை விரித்துக் கேட்பது போல் இருக்கின்றது.

இதைப்போன்ற நுண்கதைகளை நீங்களும் எழுதலாம் அல்லவா? உங்களுக்குப் பிடித்த விஷயங்கள் பற்றி நீங்களும் எழுதுங்கள்.

**கவி/ஆசிரியர்:** நீதிமணி, கல்வித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். குழந்தைகளுக்கானக் கதைகளை எழுதுபவர். சிறந்த கதைசொல்லி. மேலை நாடுகளில் இப்போது புகழ்பெற்ற குறுங்கதை வடிவில், இவர் தமிழில் எழுதிய கதைகள் நம் பாடப்பகுதியாக உள்ளன.



# சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பலூனில் மலர்கள் ஏன் வாடி இருந்தன?
2. மரம் எவ்வாறு கைகளை விரித்து இருந்தது?
3. நீங்கள் கதை எழுதி உள்ளீர்களா? ஒரு கதையைப் பற்றி உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடவும்.

## சிந்தித்து எழுதுக

★ இந்த நுண்கதைகள் உங்களுக்குப் பிடித்திருந்தனவா? ஏன்?

★ கதையைத் தொடர்ந்து எழுதுக.
ஒரு சிறுவன் பள்ளி செல்லும் வழியில் ஒரு மூதாட்டி கீழே விழுவதைப் பார்த்தான் ....

★ ''என் பலூன் கதை'' - சில வரிகளில் எழுதுங்கள்.

## குழுச் செயல்பாடு

★ நீங்கள் படித்த கதை ஒன்றை வகுப்பு தோழர்களுக்குக் கூறவும். பின்னர் அதை நண்பர்களுடன் சேர்ந்து நாடகமாக நடித்துக் காட்டவும்.

## செயல் திட்டம்

- பின்வரும் சொற்களைக் கொண்டு கதை ஒன்றைக் கூறவும். பின்னர் பயிற்சி ஏட்டில் எழுதவும்.

**(மாடு - பூங்கா - காவலாளி)**

- **கீழ்க்காணும் பத்தியை வாசித்து அதில் உள்ள பெயர்ச் சொற்கள், வினைசொற்கள், பதிலிப் பெயர்சொற்களை கண்டு பிடித்து எழுதவும்.**

இராமுவும் பாலுவும் நல்ல நண்பர்கள். அவர்கள் இருவரும் பள்ளிக்குச் சேர்ந்தே செல்வார்கள். ஒரு நாள் இராமு பள்ளிக்கு வரவில்லை. ''இராமு பள்ளிக்கு ஏன் வரவில்லை'' என ஆசிரியர் பாலுவிடம் கேட்டார். ''பாலு எனக்கு தெரியாது'' என பதில் கூறினான். ''நீ மாலையில் அவன் வீட்டிற்குச் சென்று அறிந்து வா'' என ஆசிரியர் அவனிடம் கூறினார்.

| | |
|---|---|
| பெயர்ச்சொல் | |
| வினைச்சொல் | |
| பதிலிப் பெயர் | |



- **சிறுகதையை உரையாடல் வடிவில் மாற்றவும்.**

**சிங்கம்:** என்னைத் தூக்கத்திலிருந்து ஏன் எழுப்பினாய்?

**எலி:** ____________________

**சிங்கம்:** ____________________

**எலி:** ____________________

**சிங்கம்:** ____________________

**எலி:** ____________________

# மொழியை அறிவோம்



கவிதா மாலைத் தொடுக்கிறாள்.

| எழுவாய் | செயப்படு பொருள் | பயனிலை |
|---|---|---|
| கவிதா | மாலை | தொடுக்கிறாள் |

இவ்வாறு எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என அமையும் வாக்கியங்கள் செய்வினை வாக்கியங்கள் எனப்படும்.



மாலை கவிதாவால் தொடுக்கப்பட்டது.

| செயப்படு பொருள் | எழுவாய் | பயனிலை |
|---|---|---|
| மாலை | கவிதா | தொடுக்கப்பட்டது |

மேலே கூறியவாறு செயப்படுபொருள்-எழுவாய் பயனிலை என அமையும் வாக்கியங்கள் செயப்பாட்டு வினை வாக்கியங்கள் எனப்படும்.

# 13. இயற்கை என்னும் தீராத புத்தகம்.

[இயற்கை அழகானது மட்டுமல்ல; விந்தையானதும் ஆகும். எதிர்கால சந்ததிக்கு நம்மால் முடிந்த அளவு பூமியில் பசுமையை பயிர் செய்வோம்! நலம் பெறுவோம்!]

நாம் வாழும் இந்த பூமிக்குச் சொந்தக்காரர்கள் யார்? தாவரங்களா? மிருகங்களா? பறவைகளா? மனிதர்களா? ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு வண்ணம்! ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு உணவு பழக்கம். ஒவ்வொரு உயிரும் தாங்கள் வாழ்கின்ற சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்கின்றது. இந்த அற்புதங்களுக்கு எல்லாம் காரணம் யார் தெரியுமா? நம்முடைய இயற்கை அன்னை!



பூமியில் தோன்றிய உயிரினங்களில் சிறந்த இனம் மனித இனம்! மற்ற உயிரினங்கள் இயற்கையை மாற்றுவதற்கு முயல்வது கிடையாது. இயற்கை சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்கின்றன. இயற்கையைப் பற்றி அதிகம் ஆராயும் உயிரினம் யார் தெரியுமா? அதுவும் மனிதன் தான்!

ஆறறிவு படைத்த மனிதன் இயற்கை சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி வாழ்வது இல்லை. தான் வாழ்வதற்காக இயற்கையை மாற்றுகிறான்; மேட்டை பள்ளமாக ஆக்குகிறான்; பள்ளத்தை மேடாக ஆக்குகிறான்; ஆற்றில் அணை கட்டுகிறான்; மரங்களை வெட்டுகிறான்; பொழுதுபோக்குக்காக விலங்குகளை வேட்டையாடுகிறான்.

இவ்வாறாக, இயற்கைக்கு அதிகமானப் பாதிப்புகளை ஏற்படுத்துகிற உயிரினமும் மனிதன் தான். இயற்கை அன்னைக்கு நாம் ஏற்படுத்தும் நஷ்டம்- கஷ்டம் என்பது நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்கிற நஷ்டம் - கஷ்டம்.

அதேபோல் நாம் வாழும் இந்த பூமியில் எல்லா இடங்களும் ஒன்று போலவா இருக்கின்றன? இல்லையே!

ஓர் இடத்தில் குளிர். ஓர் இடத்தில் வெப்பம்.

ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு தட்பவெட்ப சூழலுக்கும் ஏற்ற மாதிரி உயிரினங்கள் உள்ளன. அதனால் தான் மனிதரில் பல்வேறு நிறங்கள் உள்ளன. சூரிய வெப்பத்தில் இருந்து காக்க மெலனின் என்ற நிறமி அதிகமாக சுரக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான நிறங்கள், இனங்கள் உள்ளன. ஆனால் எல்லோரும் மனிதர்கள்.

**இனங்கள் வேறு வேறு என்றாலும்**
**மதங்கள் வேறு வேறு என்றாலும்**
**கலாச்சாரம் வேறு வேறு என்றாலும்**
**மனிதர்கள் யாவரும் சரிசமம்.**

மானுடத்தின் தோட்டத்தில் நூறு பூக்கள் மலரட்டும்! நூறு பூக்களும் மணம் வீசட்டும்!

**கவி/ஆசிரியர் :** உதயசங்கர், குழந்தைகளுக்காக எழுதும் எழுத்தாளர்களில் முக்கியமானவர். கதைகள், நாவல்கள், கட்டுரைகள் என நூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இந்திய அளவில் சிறார் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயரிய விருதான 'பால சாகித்ய புரஷ்கார்' விருது பெற்றவர்.

# சிந்திப்போம்! செயல்படுவோம்!



- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பூமிக்கு சொந்தக்காரர்கள் யார்?
2. இயற்கையைப் பற்றி ஆராயும் உயிரினம் எது ?
3. நாம் வாழும் பூமியில் எல்லா இடங்களும் ஒன்றுபோல் இருக்கின்றனவா? வேறுபாடுகளைக் கூறுக.

- **சொற்களை இணைத்து சரியான வாக்கியங்களை உருவாக்கவும்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மேடுகளை | i) | அணை கட்டுதல் |
| 2. | பள்ளத்தை | ii) | பாதுகாத்தல் |
| 3. | ஆற்றில் | iii) | மேடாக்குதல் |
| 4. | விலங்குகளை | iv) | பள்ளமாக்குதல் |

- **கீழ்க்காணும் தலைப்புகளில் கவிதை எழுதுக.**

அ. இயற்கை    ஆ. அம்மா    இ. மரங்கள்

**தகுந்த சொற்களைக் கொண்டு பத்தியை நிறைவு செய்க.**
(நாங்கள், எங்கள், என்னுடைய, என், நான்)

__________ பெயர் ஆதவன். __________ நான்காம் வகுப்பில் படிக்கிறேன். __________ நண்பன் மதிச் சந்திரன். __________ இருவரும் பள்ளிக்குப் பேருந்தில் செல்வோம். __________ இருவருக்கும் அந்தப் பயணங்கள் மிகவும் பிடிக்கும்.

- **சொற்களைப் பிரித்து எழுதுக.**

1) உயிரினங்கள் = __________ + __________

2) விந்தையானது = __________ + __________

3) ஆறறிவு = __________ + __________

## ● படத்தைப் பார்ப்பேன்; சொற்றொடரை எழுதுவேன்.




## சிந்தித்து எழுதுக

★ பூமியில் உள்ள உயிரினங்கள் எதற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்கின்றன?
★ மனிதர்கள் எவ்வாறு இயற்கையை மாற்றுகிறார்கள்?
★ நான் இயற்கைக்காகச் செய்யும் 5 செயல்கள்
★ எங்கள் வீட்டில் நீர் சேமிப்பு முறைகள்

## குழு செயல்பாடு

★ சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த நாடகத்தை உருவாக்கிப் பள்ளியில் நிகழ்த்திக் காட்டுங்கள்.

★ புவி வெப்பமயமாதல் பற்றிய செய்திகளைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

★ இயற்கைப் பாதுகாப்பு குறித்த சுவரொட்டியைத் தயாரியுங்கள்.

# 14. இரட்டுற மொழிதல்

## (காளமேகப் புலவர்)

[ஒரு சொல் அல்லது சொற்றொடர் பல பொருள் தரும்படி அமைவது சிலேடை எனப்படும். இவை சொல்லாட்சித் திறனையும் நகைச்சுவையையும் வெளிப்படுத்துகின்றன.]

தமிழ் இலக்கியங்களில் புலவர்கள் தாங்கள் எழுதும் செய்யுள்களை இலக்கிய நயம் தோன்ற படைப்பர். தமிழில் பல வகை இலக்கிய நயங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றே இரட்டுற மொழிதல் ஆகும். ஒரு சொல் அல்லது தொடரை இரு வகைப் பொருள் தருமாறு அமைப்பது இரட்டுற மொழிதல். இது சிலேடை எனவும் அழைக்கபெறும். சங்க காலத்தையொட்டி வாழ்ந்த காளமேகப் புலவர் சிலேடைப் பாடுவதில் வல்லவர். அவர் பல சிலேடைப் பாடல்களை இயற்றியுள்ளார்.

### வைக்கோலும் யானையும்



வாரிக் களத்தடிக்கும் வந்த பின்பு கோட்டைபுகும்

போரிற் சிறந்து பொலிவாகும் - சீருற்ற

செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்

வைக்கோலும் மால் - யானை யாம்.

**கவி/ஆசிரியர் :** காளமேகப்புலவரின் இயற்பெயர் வரதன். இவருடைய காலம் 15ஆம் நூற்றாண்டு ஆகும். கார்மேகம் மழை பொழிவது போல் விரைந்து கவிதைகள் பாடும் ஆற்றல் பெற்று இருந்ததால் ‘கவி காளமேகம்’ எனப் போற்றப் பெற்றார்.

**பொருள்:-**

**வைக்கோல்:** அறுவடை செய்யப்பட்டுக்களத்து மேட்டில் வாரிக் கொண்டு வந்து அடிக்கப்படும். பின்னர் வைக்கோல் போராகக் கோட்டையில் சேமிக்கப்படும். வைக்கோல் போரில் அது சிறந்து பொலிவுற்றிருக்கும்.

**யானை :** பகைவீரர்களைத் தன் துதிக்கையால் வாரி போர்க்களத்தில் அடிக்கும். பின்னர் தன் கட்டுத்தறியாகிய கோட்டைக்குள் புகும். போர்க்களத்தில் சிறப்புடன் பொலிவுற்று விளங்கும்.

காளமேகப்புலவர் வைக்கோலும் யானையும் ஒன்று என ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

## ★சொற்றொடரின் இருவேறு பொருளை ஒப்பிட்டு அறியவும்.

| சொற்றொடர் | வைக்கோல் | யானை |
|---|---|---|
| வாரிக் களத்தடிக்கும் | அறுவடை செய்யப்பட்டுக் களத்துமேட்டில் வாரிக் கொண்டுவந்து அடிக்கப்படும். | பகைவர்களைத் துதிக்கையினாலே வாரிப் போர்க்களத் தில் அடிக்கும். |
| வந்து பின் கோட்டை புகும் | பின்னர் வைக்கோல் போராகக் கோட்டையில் சேமிக்கப்படும். | பின்னர் தன் கட்டுத்தறியாகிய கோட்டைக்குள் புகும். |
| போரிற் சிறந்து பொலிவாகும். | பெரிய வைக்கோல் போராய் சிறப்புற்று அழகாய் விளங்கும் | போர்க்களத்தில் பொலிவுற்றுச் சி றப்புடன் விளங்கும். |

# சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

அ. சிலேடை என்றால் என்ன?

ஆ. இந்தச் சிலேடைப் பாடலை பாடியவர் யார்?

இ. வைக்கோல் எதற்கு ஒப்பாக்கப்படுகிறது?

- **பாடலில் வரும் எதுகை, மோனை சொற்களை எடுத்து எழுதுக.**

அ . எதுகை : ..............., ........................

ஆ. மோனை : ...................., .........................

- **கட்டங்களை நிரப்புக.**

அ. மதுரையைச் செழிப்பாக்கும் ஆறு.

ஆ. சிவந்த நிறமுடைய பழம்.

இ.அரசன் வைத்திருக்கும் கோல்.

ஈ. மாலையில் மலரும் வெண்ணிற மலர்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | வை | | |
| | | க் | | |
| | | கோ | | |
| | | ல் | | |

- **இணைத்து எழுதுக.**

| | |
|---|---|
| சொல் | பல பொருள்கள் |
| மாலை | உண்மை,உடம்பு,யாக்கை |
| அணி | நதி,எண், வழி |
| மெய் | பூமாலை, நேரம், பொழுது |
| ஆறு | அணிகலன், வரிசை, அணிதல் |
| | |

## ● படம் இங்கே விடுகதை எங்கே?

1. ______________________________





2. ______________________________

3. ______________________________





4. ______________________________

## செயல்பாடுகள்

★ இணைய தளத்திலும் பெரியவர்களிடத்திலும் கேட்டு சிலேடைப் பாடல்களையும், அவற்றின் பொருள்களையும் உன் பயிற்சிப் புத்தகத்தில் எழுதவும். சக மாணவர்களிடம் வாசித்துக் காட்டவும்.

★ குழுவில் கலந்துரையாடி ஒரு சிலேடையை உருவாக்குங்கள்.

## மொழியை அறிவோம்.

**இந்தச் சொற்றொடர்களை உற்றுநோக்குங்கள்.**

- **நன்றாகப் பேசினான்.**
- **மிக்க பசி.**
- **காவல் மிக்க நகரம்.**
- **கூர்மையான அறிவு.**

**இந்தச் சொற்றொடர்களுக்குப் பதிலாக கீழே கொடுக்கப்பட்டுள்ளச் சொற்றொடர்களை வாசியுங்கள்.**

- **சாலப் பேசினான்.**
- **உறு பசி.**
- **கடி நகர்.**
- **கூர் மதி.**

நன்றாக, காவல், மிக்க, கூர்மையான, என்ற சொற்களுக்குப் பதிலாக சால, கடி, உறு, கூர் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை உரிச்சொல் எனப்படும்.

**பெயர் அல்லது வினைச்சொற்களுக்கு முன்பாக வந்து, அதன் பண்பை மிகுதிபடுத்திச் சொல்வது உரிச்சொற்கள் ஆகும்.**

இவை பெரும்பாலும் செய்யுளுக்கே உரிய சொற்களாகவும் பொருளை விளக்கும் அடைமொழியாகவும் பயன்படுகின்றன. மேலும் சில எடுத்துக்காட்டுகளை அறிவோம்.

உறுபொருள், சாலச்சிறந்தது, தவச்சிறிது, கடிமலர்

- **தகுந்த உரிச்சொற்களை எழுதுக**

**(நனி, உறு, மா, கூர்)**

1. ____________ வாள்
2. ____________ தின்றான்
3. ____________ மீன்
4. ____________ நகர்

## செயல்பாடு

### பத்தியை வாசித்துக் கேள்விகளுக்கு விடை அளிக்க

மனிதன் ஆறறிவு படைத்தவன். அவன் கற்காலம் தொட்டு சக மனிதர்களோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்தான். மன்னர்கள் காலத்தில் புறா, கிளி, அன்னம் போன்ற பறவைகளை அனுப்பிப் பிறருடன் தொடர்பு கொண்டான் என்பதை கதைகளில் நாம் படித்திருக்கின்றோம். சென்ற நூற்றாண்டுகளில் கடிதங்கள் வாயிலாக செய்திகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அஞ்சலட்டை செல்லாதக் கிராமமே இல்லை எனலாம். தற்காலத்தில் அலைபேசியில் செய்திகள் மூலமும் இணைய அஞ்சல் வாயிலாகவும் செய்திகளை நொடியில் பரிமாறிக் கொள்கின்றோம்.

1. **செய்திச் தொடர்புக்கு பயன்பட்ட பறவைகள் எவை?**
2. **தற்காலத்தில் எதன் மூலம் செய்திகளைப் பரிமாறி கொள்கிறோம்?**
3. **நீ யாருக்குக் கடிதம் எழுதியிக்கிகுறாய்?**
4. **'கற்காலம்' என்பதன் எதிர்ச்சொல் என்ன?**
5. **பத்தியிலிருந்து எழுதுக பெயர்ச் சொற்களை எடுத்து**
6. **சொற்களைப் பிரித்து எழுதுக.**

1) அஞ்சலட்டை= ______ + ______ 2) ஆற்றிவு= ______+ ______.



# 15. எலிபெண்டா குகைகள்

## (பயணக் கட்டுரை)

[உலகம் சுற்றிய தமிழர் என்று புகழப்பட்டவர் ஏ.கே.செட்டியார் ஆவார். அவரது ‘பிரயாண கட்டுரைகள்’ என்ற நூலில் இருந்து சிறு பகுதி பாடமாக வைக்கப்பட்டு இருக்கிறது. இந்நூல் 1947 ஆம் ஆண்டு வெளியானது.]

திருவண்ணாமலையில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு சென்று ‘கடலை பார்க்காத மாணவர்கள் கையை உயர்த்துங்கள்’ என்றால் பாதிபேர் கையை உயர்த்துவார்கள். வேதாரண்யத்திலே, ‘மலையை பார்க்காதவர்கள் கையை உயர்த்துங்கள்’ என்றால் பாதி பேர் கையை உயர்த்துவார்கள். ‘‘நான் இந்த ஊரில் பல வருடமாக வேலை செய்கிறேன். வேலை முடிந்தால் வீடு. அடுத்த வீட்டில் இருப்பவரைக் கூட தெரியாது’’. என்று சிலர் பெருமை பேசுவார்கள்.

அயல்நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள், வீதிகள், கட்டடங்கள், வாகனங்கள் என்று பெருமை பேசுவார்கள். இரண்டாம் உலகப்போர் காலத்தில் ரங்கூனுக்குப் போகும் கப்பல் ஒன்றில் எலிபெண்டா என்ற பெயர் இருந்தது. அது ஒரு நாட்டின் பெயர் என்று நினைத்தேன். பம்பாய்க்குச் சென்ற பின்னரே ‘எலிபெண்டா’ பற்றித் தெரிந்தது.

பம்பாயிலிருந்து கடல் வழியாக சுமார் ஏழு மைல் தொலைவில் இருக்கும் மிகச் சிறிய தீவுதான் எலிபெண்டா ஆகும். இந்த மிகச்சி றிய தீவுக்கு மிகப்பெரிய பெருமை அளிப்பது இங்குள்ள குகைகளும் அவற்றில் உள்ள சிற்பங்களும் ஆகும். 16 ஆவது நூற்றாண்டில் நமது நாட்டுக்கு வந்த போர்த்துக்கீசியர்கள் இத்தீவை தம் வசப்படுத்திக் கொண்டனர்.

அக்காலத்தில் இத்தீவில் யானையின் சிலை இருந்ததாம். அதனால் இத்தீவுக்கு ‘எலிபெண்டா’ என்று பெயர் வந்ததாம். அந்தச் சிலை காலப்போக்கில் நாசம் செய்யப்பட்டது. எஞ்சியுள்ள உருவத்துடன் இப்பொழுது பம்பாய் விக்டோரியா நந்தவனத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது. எலிபெண்டா என்று பெயர் வைக்கும் முன் இத்தீவுக்கு ‘கரபுரி’ என்ற பெயர் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு நமது இந்திய அரசு இக்குகைகளைப் பாதுகாக்கிறது.

காலை ஒன்பது மணிக்கு கப்பலில் புறப்பட்டால் சுமார் பதினொரு மணிக்கெல்லாம் எலிபெண்டாக் கடற்கரையை அடையலாம். கப்பல் நின்ற இடத்திலிருந்து கால் மணி நேரத்தில் குகையை அடையலாம்.



குகை என்றாலே இருட்டு நினைவுக்கு வரும். விளக்கு வேண்டும் என்று நினைப்போம். வெளியிலிருந்து பார்த்தால்தான் குகை என்று தோன்றும். உள்ளே சென்றால் மண்டபம் போல் இருக்கிறது.



அங்குள்ள சிற்பங்கள் 15 முதல் 20 அடி உயரம் உள்ளவை. மத்தியில் உள்ள மகேசுவர மூர்த்தி சிலைதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. அதன் மூன்று முகங்களும் அற்புதமானவை. நடராஜாவின் நடனத்தையும் துவார பாலகர்களையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அடுத்தடுத்தக் குகைகளையும் இரசிக்கலாம்.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பாடத்தில் எந்த இடத்திற்குக் கட்டுரை ஆசிரியர் சுற்றுலா சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது?
2. எலிபெண்டா குகைகள் எங்கு உள்ளன?
3. எலிபெண்டா குகைக்கு கட்டுரை ஆசிரியர் எவ்வாறு சென்றார்?

- **கீழ்க்காணும் வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. நாங்கள் கப்பலில் சென்றேன்.
2. பம்பாய் நகரங்களில் மக்கள் தொகை பெருக்கம் அதிகம் ஆகும்.

- **அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களுக்குள் பொருத்த மானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(வேகமாக, பணிவாக, மெதுவாக, மகிழ்ச்சியாக)**

1. தேர்வில் வெற்றி பெற்றதால் அகிலன் ______________ இருந்தான்.
2. அடுத்தவருக்குக் கேட்காதபடி கண்ணன் காதுக்குள்ளே ______________ பேசினான்.
3. மேகம் ______________ போகும்போது காண்பதற்கு அழகாக இருக்கும்.
4. பெரியோரை மதித்து ______________ நடக்க வேண்டும்.

- **செய்வினைவாக்கியங்களைசெயப்பாட்டுவினைவாக்கியமாக மாற்றுக.**

1. கயல்விழி திருக்குறள் படித்தாள்.
2. தலைவர் பரிசு வழங்கினார்.
3. தேவி பொம்மை செய்தாள்.

## சிந்தித்து எழுதுக

- நீ சுற்றுலா சென்ற அனுபவத்தை அல்லது ''உன் கனவு பயணம்'' பற்றிச் சில வரிகளில் எழுதவும்.
- எலிபெண்டா குகையைப்பற்றி கட்டுரையாசிரியர் கூறுவதை எழுதவும்.
- ஏன் நாம் உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்?

## அனுபவ பகிர்வு

- நீ இயந்திரப் படகில் சென்றதுண்டா? அந்த அனுபவத்தை உன்னுடைய சொற்களில் விவரிக்கவும்.

## குழுச் செயல்பாடு

- சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலாப் பயணிகள் போல நடித்துக்காட்டுக.
- சுற்றுலாத் தலங்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என குழுவில் கலந்துரையாடி, எழுதி, காட்சிப்படுத்தவும்.



# வாசிப்புப் பகுதி



### கீழ்க்காணும் சொற்களை உற்றுநோக்கி வாசியுங்கள்

1 ) **விகடகவி**

2 ) **வா தாத்தா வா**

3 ) **மாலா போலாமா**

4) **மோரு தருமோ**

5 ) **தேரு வருதே**

6 ) **தோடு ஆடுதோ**

இச்சொற்களை வலமிருந்து இடமாகவோ அல்லது இடமிருந்து வலமாகவோ எப்படி வாசித்தாலும் எழுத்துகள் மாறாமல் ஒன்றுபோல் வார்த்தைகள் அமைகிறது. இதற்கு பெயர்தான் மாலை மாற்று சொற்கள், இருவழியொக்கும் சொற்கள் அல்லது தலைகீழ்ச் சொற்கள் என்பதாகும். தமிழ் மொழியில் மட்டுமன்றி ஆங்கிலம், மலையாளம் போன்ற பிற மொழிகளிலும் நாம் இதுபோன்ற சொற்களைக் காண்கின்றோம். ஆங்கிலத்தில் இவற்றை 'பாலின்ட்ரோம்' சொற்கள் என்கிறோம். இப்படிப்பட்ட சொற்கள் மொழியின் அழகையும் தனித்துவத்தையும் காட்டுகின்றன.

எண்களிலும் இத்தகைய தலைகீழ் எண்கள் உள்ளன. 121, 595 இந்த எண்களை இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக மாற்றினால் கூட அதன் மதிப்பு மாறாது.

## செயல்பாடு

**கீழே உள்ள சொற்களில் விடுபட்ட எழுத்தை நிரப்பி மாலை மாற்று சொற்களை யும் வாக்கியங்களையும் எழுதுக.**

1) **பா --பா**

2) **தா-- தா**

3) **மேளதா -- மே**

4) **வா தா--வா**

5) **மோ--- தாரு ---**



# 16. தோழிக்குக் கடிதம்





சயான், மும்பை,
10/10/2026

**அன்புள்ள தோழி எழிலுக்கு,**

உன் அன்பு தோழி அன்பழகி எழுதும் மடல். நான் இங்கே நலம். எனது பெற்றோர் மற்றும் அண்ணன் நலமாக உள்ளனரா? உனது கடிதம் கிடைத்தது. நீ முதலாவது பருவத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

கடந்த வாரம் எங்கள் மாநகராட்சி பள்ளிகளுக்கு இடையே நடை பெற்ற கலை விழா போட்டிகளில் நானும் பங்கு பெற்றேன். ‘கண்ணகி’ நாடகத்தில் கண்ணகியாக நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனக்கு சிறப்புப் பரிசும் கிடைத்தது. இச்செய்தியை உன்னோடு பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



என் பள்ளி நிகழ்ச்சிகளை வலைதளத்தில் காண முடியும். உன் பெற்றோருக்கு என் வணக்கங்களை தெரிவிக்கவும். கோடை விடுமுறையின் போது நீ அவசியம் மும்பைக்கு வரவேண்டும். நாம் இங்கு பல இடங்களைக் கண்டு களிக்கலாம்.





இப்படிக்கு
**அன்பழகி.**

முகவரி:
க.எழிலி,
15/7, ராஜாஜி நகர்,
சேலம், தமிழ்நாடு.



## சிந்திப்போம்! செயல்படுவோம்!

- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. இந்தப் பாடத்தில் கடிதத்தை எழுதியது யார்?
2. எழிலி எங்கு வசிக்கிறாள்?
3. அன்பழகி நடித்த நாடகத்தின் பெயர் என்ன?
4. கடிதத்தின் தொடக்கத்தில் என்ன எழுத வேண்டும்?

- **பேசுவோம் வாருங்கள்.**

1. கண்ணகி நாடகம் உன் பள்ளியில் நடத்தப்பட்டால் நீ எந்த கதாபாத்திரமாக நடிக்க விரும்புவாய் அதை பற்றிக் கூறவும். ஏன்?
2. தற்காலத்தில் கடிதம் எழுதும் பழக்கம் எவ்வாறு மாறியுள்ளது? அதற்கான காரணங்களைக் கூறுங்கள்.

- **கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. கடிதத்தின் மேல் பகுதியில் ____________ எழுத வேண்டும்.

ஆ. கடிதத்தின் இறுதியில் ____________ எழுத வேண்டும்.

இ. ஆசிரியருக்கு எழுதுவது ____________ கடிதம் ஆகும்.

ஈ. நண்பருக்கு, உறவினருக்கு எழுதுவது ________ கடிதம் ஆகும்.

★ **செய்விளை வாக்கியத்தை செயப்பாட்டு வாக்கியமாக மாற்றுக.**

1. கரிகாலன் சோழநாட்டை ஆண்டாள்.
2. செல்வி தேர்வு எழுதினாள்.
3. கிளி பழத்தைத் தின்றது.

## சிந்தித்து எழுதுக

- உனது எதிர்காலம் குறித்து உன் சித்திக்கு ஒரு கடிதம் எழுதவும்.
- உனது உறவினர் அல்லது நண்பருக்கு உனக்கு பிடித்த நூல் பற்றி ஒரு கடிதம் எழுதவும்.
- வெளிநாடுகளில் வசிக்கும் உறவினருக்கு செய்தி விரைவாக சென்றடைய நீங்கள் எந்த ஊடகத்தை பயன்படுத்துவீர்கள் என்பதை பற்றி எழுதவும்.

## செயல்பாடு

- நீ படித்தக் கதை ஒன்றின் கதாபாத்திரம் பேசுவதுபோல் பேசி, அதைக் காணொளிக் காட்சியாக எடுத்து மற்ற மாணவர்களுக்குக் காட்டவும்.

## செயல் திட்டம்

- **அஞ்சல் அலுவலகத்தில் பயன்படும் பொருள்களை சேகரித்து ஒரு தொகுப்பேடு தயார் செய்யவும்.**












# 17. பெய்ல் போலா

**[தமிழகத்தில் பொங்கல் விழாக் காலத்தில் மாடுகளுக்கு நன்றி செலுத்துவது போல, மகாராஷ்டிராவிலும் மாடுகளைச் சிறப்பிக்கக் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய விழா பெய்ல் போலா ஆகும்.]**

பெய்ல் போலா மகாராஷ்டிரா மாநிலத்தில் விவசாயிகளால் கொண்டாடப்படும் திருவிழா ஆகும். இது தனித்துவமான, பாரம்பரிய, கிராமிய திருவிழா ஆகும்.

நம் நாட்டின் முதுகெலும்பு கிராமங்கள். முதன்மையான தொழில் விவசாயம். அதற்கு உறுதுணையாக இருப்பவை கால்நடைகள். அதிலும் உழவுக்குக் காளைகளின் பங்கு முக்கியமானது. காலமெல்லாம் உழவருக்கு உதவும் காளைகளுக்கு நன்றி கூறும் திருவிழாவே பெய்ல் போலா ஆகும்.



பெய்ல் போலா சிரவண மாதத்தின் அமாவாசை நாளில் கொண்டாடப் படுகிறது. விவசாயிகள் தங்கள் காளைகளைக் குளிப்பாட்டுவார்கள், கண்களுக்கு மை தீட்டுவார்கள், கொம்புகளுக்கு வண்ணம் தீட்டுவார்கள், வண்ணக் கயிறுகள், அலங்கார துணிகள், பலவகை மணிகளால் மிகச்சிறப்பாக காளைகளை அலங்கரிப்பார்கள், விதவிதமான உணவுகளை அளிப்பார்கள்.

குழந்தைகள் காளை பொம்மைகளைச் செய்து விளையாடுவார்கள். மாலையில் மேளதாளங்கள் முழங்க காளைகளின் ஊர்வலம் நடக்கும். வண்ண வண்ணக் காளைகளின் ஊர்வலம் அனைவரின் கண்களையும் கவரும். குழந்தைகளும் தங்கள் காளை பொம்மைகளை வண்டியில் வைத்து இழுத்து மகிழ்வார்கள்.

மறுநாளிலிருந்து இயற்கையோடும் உயிரினங்களோடும் இணைந்த நமது பாரம்பரிய வாழ்வின் அடிப்படை தொழிலான விவசாயப் பணிகளைத் தொடங்குவார்கள்.

கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு இடம் பெயர்ந்தவர்களிடம் காளைகள் இல்லாவிட்டாலும் காளை பொம்மைகளை வாங்குவார்கள். அவற்றை அலங்கரித்து பெய்ல் போலா திருவிழாவை கொண்டாடி மகிழ்வார்கள்.

பெய்ல் போலா திருவிழா சமூக நல்லிணக்கம் மற்றும் குடும்ப பிணைப்பின் சின்னமாக உள்ளது. இது மகாராஷ்டிராவில் மட்டுமல்ல கர்நாடகா, சட்டீஸ்கர், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் கொண்டாடப்படுகிறது.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



### வினாக்களுக்கு விடையளிக்க.

1. பெய்ல் போலா திருவிழா எந்தெந்த மாநிலங்களில் கொண்டாடப்படுகிறது?
2. நம் நாட்டு மக்களின் முக்கிய தொழில் யாது?
3. பெய்ல் போலா திருவிழா எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?
4. காளைகளை உழவர்கள் எவ்வாறு அலங்காரம் செய்வர் ?

### சொற்களைப் பிரித்து எழுதுக.

1. உறுதுணையாக = ________ + ________
2. முதுகெலும்பு = ________ + ________
3. திருவிழா = ________ + ________

- **பின்வரும் எடுத்துக்காட்டுகளில் உள்ள அடிக்கோடிட்ட சொற்களைப் போல பத்தியில் உள்ள பெயரடைச் சொற்களை அடிக்கோடிடவும்.**

(எ.கா) மயில் அழகிய பறவை. எவரெஸ்ட் உயரமான மலை.

ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் நன்றாக பாடுவான். அவனது இனிமையான குரலைக் கேட்டு அனைவரும் அவனைப் பாராட்டுவர். மாலை வேளைகளில் அவன் வீட்டிற்கு அருகில் உள்ள சிறிய குளத்தின் கரையில் இருந்த பெரிய ஆலமரத்தடியில் அமர்ந்து தினமும் பாடுவான்.

- **கீழ்க்காணும் சொற்களைப் புதிய வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக.**

உழவர்கள், காளைமாடுகள், இயற்கை, திருவிழா. பொம்மை

## சிந்தித்து எழுதுக

★ **நகரங்களுக்கு இடம் பெயர்ந்தவர்கள் எவ்வாறு பெய்ல் போலா திருவிழாவைக் கொண்டாடுவார்கள்?**

★ **உங்கள் ஊரில் /வீட்டில் கொண்டாடும் விழாக் கள் குறித்து எழுதவும்.**

★ **பெய்ல் போலா பற்றிச் சில வாக்கியங்கள் எழுதவும்.**

## கலந்துரையாடுக

★ **நீ ங்கள் வசிக்கும் பகுதியில் பெய்ல் போலா கொண்டாடப்படுவதை பார்த்திருக்கிறீர்களா ? அதுபற்றி நண்பர்களுடன் கலந்துரையாடவும்.**

## குழுச் செயல்பாடு

★ **தமிழகத்தில் கொண்டாடப்படும் மாட்டுப் பொங்கலுக்கும் மகாராஷ்டிராவில் கொண்டாடப்படும் பெய்ல் போலாவுக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பற்றிக் குழுவில் பேசுக.**

# மொழியை அறிவோம்

### கீழ்க்காணும் சொற்றொடர்களை வாசியுங்கள்.

- **மயில் போல மாதவி ஆடினாள்.**
- **தமிழ் தேன் போன்று இனிமையானது.**

இச் சொற்றொடர்களில் மாதவி ஆடியதை மயிலுக்கு ஒப்புமைப்படுத்தியும் தமிழின் இனிமையை தேனுக்கு ஒப்புமைப்படுத்தியும் கூறப்பட்டுளளது.

**இவ்வாறு ஒரு பொருளை விளக்கவோ, அழகுபடுத்தவோ புலவர்கள் உவமை என்னும் அணியைப் பயன்படுத்துகின்றனர்.**

### மதிமுகம், முகமதி

இந்த இரண்டு சொற்களை வாசியுங்கள்.

மதிமுகம், முகமதி என்பதற்கு நிலவு போன்ற முகம், முகமே நிலவு என்று பொருளாகும். இச்சொற்களில் 'போன்ற' என்ற உவம உருபு மறைந்துள்ளது. இவ்வாறு உவம உருபு மறைந்து பொருள் தருமாயின், இதை நாம் உருவகம் என கூறுகிறோம்.

**உவமை சொல்லையும், உவமிக்கப் படும் சொல்லையும் வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக் கூறுவது 'உருவகம்' ஆகும்.**

### மேலும் சில எடுத்துக்காட்டுகள்:

| உவமை | உருவகம் |
|---|---|
| தேன் தமிழ் | தமிழ்த்தேன் |
| மதிமுகம் | முகமதி |
| முத்துப்பல் | பல்முத்து |
| கயல் கண் | கண்கயல் |
| மலர் பாதம் | பாதமலர் |

# 18. திருக்குறள்

## நட்பு

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

**தெளிவுரை:** நட்புக் கொள்வது போன்ற அறிய செயல் வேறு இல்லை. அதுபோல் பாதுகாப்புக்கு ஏற்ற வேறு செயலொன்றும் இல்லை.

- நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர
  பேதையார் நட்பு.

**தெளிவுரை:** அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு பிறை நிலவாக தொடங்கி முழு நிலவாக வளரும். அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்போ முழுமதி போல் தோன்றிப் பின்னர் தேய்பிறையாக குறைந்து மறைந்து போகும்.

- நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
  பண்புடை யாளர் தொடர்பு.

**தெளிவுரை:** படிக்கப் படிக்க இன்பம் தரும் நூலின் சிறப்பைப் போல்,பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையார்களின் நட்பு ஆகும்.

- முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
  அகநக நட்பது நட்பு.

**தெளிவுரை:** இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளம் அல்ல. மாறாக மனதார நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

# பண்புடைமை



நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

**தெளிவுரை:** நீதி நெறிகளையும் நன்மைகளையும் விரும்பி பிறருக்கு நன்மை செய்யும் மனிதர்களை உலகம் போற்றும்.



- நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி
  பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு

**தெளிவுரை:** வேடிக்கையாக ஒருவரை இகழ்ந்து பேசுவது துன்பம் தருவதாகும். ஆகையால் உலக இயல்பு அறிந்து நடப்பவர் பகைவரிடமும் பண்பு கெடாது நடந்து கொள்வர்.



- பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்
  அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்,

**தெளிவுரை:** நல்ல பண்பு உடையவர்களின் ஒழுக்கத்தால் உலகம் நடைபெறுகிறது. அவர்கள் இல்லை என்றால் உலக ஒழுக்கம் மண்ணில் புதைந்து மறைந்து விடும்.



- அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
  மக்கட்பண்பு இல்லா தவர்

**தெளிவுரை:** மக்களுக்குரிய நல்ல குணங்கள் இல்லாதவர் அரத்தின் கூர்மை போல் கூர்மையான புத்தி உடையவராயினும் மரத்தைப் போன்றவர் ஆவர்.



# சிந்திப்போம்! செயல்படுவோம்!

● **பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **ஞாலம் என்ற சொல்லின் பொருள்.** ____________

அ. உலகம் ஆ. அறிவு இ. மேன்மை

2. **நகுதல் என்ற சொல்லின் பொருள்.** ____________

அ. சிரித்தல் ஆ. நட்பு இ. அன்பு

3. **இடுக்கண் என்ற சொல்லின் பொருள்.** ____________

அ. நண்பன் ஆ. துன்பம் இ. பகைவன்

● **திருக்குறளை நிறைவு செய்க.**

முகநக நட்பது .................... ........................

........................ ........................ நட்பு.

● **வினாக்களுக்கு ஏற்ற விடை அளிக்க.**

1. அறிவு உடையவர்களின் நட்பு எப்படி இருக்கும்?
2. நாம் எப்படி நட்புக் கொள்ள வேண்டும்?
3. யாரை உலகம் போற்றும்?
4. எது துன்பம் தரும்?
5. மக்கள் பண்பு இல்லாதவர் எதற்கு சமமாவர்?
6. உனக்குப் பிடித்த திருக்குறள் எது? ஏன்?

## பலவுள் தெரிக.

1. **நீதி என்ற சொல்லின் எதிர்ச்சொல்:** ____________

அ. அன்பு ஆ. அறம் இ. அநீதி

2. நண்பர் என்ற சொல்லின் எதிர்ச்சொல்: ____________

அ. அயலார் ஆ. பகைவர் இ. உறவினர்

★ சரியானச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ................ எங்கு சென்றீர்கள்?

அ. நாங்கள் ஆ. நீங்கள் இ. அவர்கள்

2. செடியில் பூக்கள் பூத்திருந்தன.------ அழகாக இருந்தன.

அ. அது ஆ. அவை இ. அவள்

3. இந்தப் படம் ------- வரைந்தேன்.

அ. அவன் ஆ. அவள் இ. நான்

- கீழேத் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளில் உள்ள உவமையை கண்டுபிடித்து எழுதுக.

| |
|---|
| குறள் : உடுக்கை இழந்தவன் கைபோல அங்கே<br>இடுக்கண் களைவதாம் நட்பு. |
| பொருள் : |
| உவமை : |

- கட்டுரை எழுதுக.

★ நட்பு குறித்து உனது கருத்துகளைக் கட்டுரையாக எழுதவும்.

## குழுச் செயல்பாடு

★ குழுவாக கலந்துரையாடி ஏதேனும் ஒரு குறள் குறித்தக் கதையை உருவாக்கி, நாடகமாக நடிக்கவும்.

## செயல் திட்டம்

★ நட்பு அதிகாரத்தில் உனக்குப் பிடித்தக் குறளுக்கு ஏற்ற கதைகளை எழுதுக, அதற்கு ஏற்றப் படங்களை வரைக.

# 19. பண்டித இரமாபாய்

[19 ஆம் நூற்றாண்டில் பெண்ணுரிமை, கல்வி மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட சான்றோர்களில் பண்டித இரமாபாய் ஒருவர் ஆவார்.]



இரமாபாய் மங்களூரில் பிறந்தார். அவர் தந்தை ஆனந்த் சாஸ்திரி டோங்கிரே. அவர் சமஸ்கிருத அறிஞர். அந்த காலத்தில் பெண்கள் கல்வி கற்கத் தடை இருந்தது. ஆனந்த் சாஸ்திரி தடையை மீறினார். மனைவிக்கும் மகளுக்கும் சமஸ்கிருதம் கற்றுக் கொடுத்தார். அதனால் ஊரார் வெறுப்புக்கு ஆளானார். சமூகம் அவரை ஊரை விட்டுத் தள்ளி வைத்தது.

இந்தியாவில் கடுமையானப் பஞ்சம் ஏற்பட்டது. இரமாபாயின் பெற்றோர் மறைந்தனர். இரமாபாயும் அவர் அண்ணனும் உயிர் தப்பினர். அப்போது இரமாபாய்க்கு வயது பதினாறு மட்டுமே. அவர் தம் அண்ணனுடன் இந்தியா முழுவதும் பயணம் செய்தார். இலக்கிய உரையாற்றினார். அவருக்கு கல்கத்தா பல்கலைக்கழகம் 'பண்டிதர்' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்டியது. 'பண்டிதர்' பட்டம் பெற்ற முதல் பெண் இரமாபாய் ஆவார்.

இரமாபாயின் 22 ஆம் வயதில் அண்ணனையும் இழந்தார். அது குழந்தைத் திருமணம் வழக்கத்தில் இருந்த காலம். பெண்ணுக்கு எட்டு வயதில் திருமணம். கணவன் இறந்தால் யார் கண்ணிலும் படாமல் மூலையில் முடங்க

வேண்டும். உடன்கட்டை ஏற்றும் வழக்கமும் இருந்தது. பெண்கள் அனுபவித்த கொடுமைகளைக் கண்டு இரமாபாய் மனம் கொதித்தார். கல்வி மூலம் பெண்கள் வாழ்வை முன்னேற்ற முடிவு செய்தார்.

இரமாபாய் பிபின் ஃகரி மெதிலி என்பவரைத் திருமணம் செய்தார். கலப்புத் திருமணம் என்பதால் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இரமாபாய் மனம் தளரவில்லை. அவருக்குப் பெண் குழந்தை பிறந்தது. பெயர் மனோரமா. பெண்கள் பள்ளி திறக்கத் தேவையான வேலைகளைத் தொடங்கினார். அப்போது காலரா நோயால் கணவரை இழந்தார்.

இரமாபாய் தன் மகளுடன் பூனா நகருக்கு இடம் பெயர்ந்தார். ‘ஆரிய மகிளா சமாஜம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார். பெண்கல்வி, குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல் ஆகியவை அதன் நோக்கங்கள் ஆகும்.

‘இந்த நாட்டில் படித்த ஆண்களில் 100 க்கு 99 பேர் பெண் கல்வியை எதிர்ப்பவர்கள்; பெண் சமத்துவத்தை எதிர்ப்பவர்கள்; பெண்களிடம் சிறு தவறு கண்டால் கூட கடுகை மலையாக ஊதுவார்கள்; பெண்ணின் குணத்தைக் கெடுக்கப் பார்ப்பார்கள்’ என்பது இரமாபாய் கருத்து ஆகும்.

‘பெண்கள் மருத்துவ இயக்கம்’ தோன்ற இரமாபாய் முக்கிய காரணமாய் இருந்தார். அவர் மருத்துவம் படிக்க இங்கிலாந்து சென்றார். காதில் ஏற்பட்ட கோளாறால் மருத்துவம் படிக்க முடியவில்லை. இராமாபாய்க்கு ஏழு மொழிகள் தெரியும். கணவரை இழந்த பெண்கள் படிக்க பூனாவில் ‘சாரதா சதன்’ என்ற பள்ளியைத் தொடங்கினார். ‘முக்தி மிஷன்’ என்ற தொண்டு நிறுவனத்தையும் தொடங்கினார். ஆதரவற்றவர்கள் அங்கே மறுவாழ்வு பெற்றனர்.

இரமாபாய் கல்வி மூலம் பெண்களை முன்னேற்றத் தொடர்ந்து பெரிதும் பாடுபட்டார். அவர் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதி ஆவார். அவரது நினைவைப் போற்றுவோம்.

**கவி/ஆசிரியர் :** ஞா. கலையரசி, வங்கிப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் ஆவார். இவர் குழந்தை இலக்கியங்களைத் தொடர்ந்து எழுதி வருபவர்.

## சிந்திப்போம்! செயல்படுவோம்!



- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. இரமாபாயின் தந்தையைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
2. இரமாபாய்க்குப் பண்டிதர் பட்டத்தை வழங்கியது யார்?
3. பண்டித இரமாபாயால் ஏன் மருத்துவம் பயில இயலவில்லை?
4. ஆரிய மகிளா சமாஜனத்தின் நோக்கங்கள் யாவை?

- **அருஞ்சொற்பொருள் எழுதுக.**

1. அறிஞர் 2. சமூகம் 3. பஞ்சம் 4. ஊதுவார்கள் 5. கோளாறு

- **சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. பதினாறு 2. பெண்ணுரிமை 3. உரையாற்றினார்

4. தளரவில்லை 5. மகளுடன் 6. உடன்கட்டை

- **சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. பல்கலை+கழகம் 2. திரு+மணம்

3. மகள்+ உடன் 4. உயிர் + தப்பினார்

- **சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. தடை 2. வெறுப்பு 3. மூலையில் 4. எதிர்ப்பு

### குழு செயல்பாடு

★ மகளிர் கல்வி கற்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்துக் குழுவாக கலந்துரையாடவும்.

### செயல் திட்டம்

★ சாதனைப் பெண்கள் பற்றியப் படங்களைத் தொகுத்து ஒரு கண்காட்சியை வகுப்பில் நடத்துங்கள்.

# 20. அந்தாதி பாடல்

[ஒரு பாடலின் இறுதி எழுத்தைக் கொண்டு அல்லது சொல்லைக் கொண்டு அடுத்த சொல்லையோ பாடல் வரியையோ தொடங்கிப் பாடும் விளையாட்டு அந்தாதி ஆகும்.]



சாந்தோ சந்தனமோ
சந்தனமானால் மணக்காதோ !
மணக்க மாங்காயோ
மாங்காயானால் தொங்காதோ !



தொங்க தோரணமோ
தோரணமானால் வணங்காயோ !
வணங்க ராஜாவோ
ராஜாவானால் ஏவானோ!



ஏவப் பல்லியோ
பல்லியானால் பதுங்காதோ !
பதுங்க கள்வனோ
கள்வனானால் கலங்கானோ !



கலங்க காவிரியோ
காவிரியானால் ஓடாதோ !
ஓட வெள்ளாடோ
வெள்ளாடானால் மேயாதோ !



மேயக் கூரையோ
கூரையானால் ஒழுகாதோ!
ஒழுக ஓட்டப்பானையோ
ஓட்டப்பானையானால் ஒடையாதோ!



ஒடைய தேங்காயோ
தேங்காயானால் நீ திம்பாயோ !

**கவி/ஆசிரியர் :** அந்தாதி என்பது ஒரு சிற்றிலக்கிய வகை பாடலாகும். இது ஒரு செய்யுள் வரியின் இறுதிச் சொல், அசை போன்றவை அடுத்து வரும் செய்யுள் வரியின் முதலாவதாக வைத்துப் பாடப்படும் ஒருவகை பாடலாகும். அந்தாதி பாடுவதில் சிறந்தவர் ஒட்டக்கூத்தர் ஆவார். இப்பாடலைத் தொகுத்து வழங்கியவர் திருமதி. சித்ரா ஆவார்.



## சிந்திப்போம்! செயல்படுவோம்!

### பலவுள் தெரிக

1. **அந்தாதி என்றால் என்ன?**

அ. கதை  ஆ. பாடல் விளையாட்டு  இ. கட்டுரை

2. **அந்தாதியில் என்ன தொடரும்?**

அ. முதல் சொல்  ஆ. கடைசி சொல்  இ. நடு சொல்

3. **அந்தாதியில் சிறந்தவர் யார்?**

அ. பாரதி  ஆ. ஒட்டக்கூத்தர்  இ. வள்ளுவர்

- **விடை எழுதுக.**

1. இப்பாடலில் மணப்பது எந்தப் பொருள்?
2. வெள்ளாடு என்ன செய்யும்?
3. அந்தாதி என்பது யாது?

- **பின்வரும் சொல்லை முதலில் வைத்து சொல் சங்கிலி ஒன்றை உருவாக்கவும்.**

| | | | |
|---|---|---|---|
| 1. மகிழ்ச்சி | | | |
| 2. கல்வி | | | |

- **பொருத்தமான வினையுரிச்சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க.**

மெல்ல, வேகமாக, நன்றாக, தெளிவாக, கொஞ்சம், குறைவாக

## குழுச் செயல்பாடு

1. மாணவர்கள் வட்டமாக அமர்ந்து அந்தாதிச் சொல் விளையாட்டை விளையாடி, அதற்கான சொல் அட்டைகளை மாணவர்களே தயாரிக்க வேண்டும்.
2. அந்தாதிப் பாடலை அபிநயத்துடன் குழுவாகப் பாடுங்கள்.

## செயல் திட்டம்

அந்தாதி பாடல்களைப் பெரியவர், ஆசிரியர் உதவியுடன் சேகரிக்கவும்.

## வாசிப்புப் பகுதி



அது ஒரு விடுமுறை நாள். கலைச்செல்வனின் வீட்டில் அவனுடைய நண்பர்கள் குழுமி இருந்தனர். அவனது வீட்டைச் சுற்றி மரங்களும் பூந்தோட்டமும் இருந்ததால் விடுமுறை நாள் அன்று நண்பர்கள் அவன் வீட்டில் கூடி விளையாடுவது வழக்கம். ''வெயில் அதிகமாக இருக்கிறது. இன்று வீட்டிலேயே அமர்ந்து விளையாடுங்கள்'' என்று கலைச்செல்வனின் தாய் கூறினார்.

மாலதி ''ஆம், வாருங்கள்! நாம் எல்லோரும் சொல் விளையாட்டு விளையாடுவோம்'' என்று கூறினாள். நான் ஒரு புதிய சொல் கூறுவேன் அதனோடு ஓர் எழுத்தோ, சில எழுத்துகளோ சேர்த்துப் புதிய சொல் ஒன்றை கூறவேண்டும், சரியா? (எ.கா.) கல் என்ற சொல்லுடன் 'வி' என்ற எழுத்தை சேர்த்தால் 'கல்வி'. ''இப்பொழுது விளையாடலாமா?'' என்று கேட்டாள். அனைவரும் மகிழ்ச்சியோடு விளையாட்டைத தொடர்ந்தனர். அப்பொழுது 'மண்' என்ற சொல்லை பானு கூறியவுடன், தனுஷ் உடனே 'மண்டு' என உரத்தக் குரலில் கூறினான். உடனே அனைவரும் சேர்ந்து சிரித்தனர்.

# 21. சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம்

[நம்மை சுற்றி உள்ள உயிரினங்களும் நலமோடு வாழவேண்டும் என்று விரும்புவது தமிழர் பண்பு. இதற்கு சான்றாக, சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களைப் பற்றியும் அவர்களது வள்ளல் தன்மையைப் பற்றியும் கூறுகிறது இந்த இனிய உரையாடல்.]

தமிழினியும் அறிவழகனும் அவர்களது தந்தையும் சங்கத்தமிழ் காட்சிக் கூடத்தைச் சுற்றிப் பார்க்கின்றனர். தமிழினியும் அறிவழகனும் தந்தையுடன் உரையாடிக் கொண்டே வந்தார்கள்.

(அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி அளிக்கும் ஓவியத்தைப் பார்க்கின்றனர்)



**தமிழினி:** அப்பா! அந்தப் பாட்டி யாரப்பா? அந்த அரசன் என்ன கொடுக்கிறார்?

**தந்தை:** அந்தப் பாட்டி புகழ்பெற்றத் தமிழ்ப் புலவர் ஔவையார். அந்த அரசன் அதியமான். அவர் கொடுப்பது நெல்லிக்கனி.

**அறிவழகன்:** அப்பா! அரசன் ஏன் அந்த நெல்லிக்கனியை அவருக்குக் கொடுக்கிறார்?

**தந்தை:** அரசன் அதிகமானுக்கு ஓர் அரிய நெல்லிக்கனி கிடைத்தது. அதைச் சாப்பிட்டால் நீண்ட நாள்கள் உயிர் வாழலாம் என்று சொன்னார்கள்.

**அறிவழகன்:** அப்படியானால் அரசனே அதைச் சாப்பிடலாமே!

**தந்தை:** அதுதான் அதியமானின் பெருமை. நான் வாழ்வதைவிட, தமிழ் வளர்க்கும் ஔவை இன்னும் நீண்ட நாள் வாழ வேண்டும் என்று நினைத்தார்.

**தமிழினி:** அதனால் தான் அவர் ஔவைக்குக் கொடுத்தாரா?

**தந்தை:** ஆமாம்! ஔவை நீண்ட நாள் வாழ்ந்து தமிழுக்குப் பல நல்ல பாடல்களைத் தரவேண்டும் என்று எண்ணினார்.

**அறிவழகன்:** அதியமான் நல்ல மனசுடைய அரசன். இல்லையா, அப்பா?

**தந்தை:** சரியாகச் சொன்னாய்! அறிவையும் தமிழையும் மதித்த அரசர் அவர். அதனால் தான் இந்த நிகழ்ச்சி காட்சிக் கூடத்தில் வரையப்பட்டுள்ளது.

**தமிழினி:** அப்பா! நானும் அனைவருக்கும் நல்லதே செய்வேன்.

**(சங்கத்தமிழ் காட்சிக்கூடத்தில் மயிலுக்குப் போர்வை போர்த்திக் கொடுக்கும் பேகன் ஓவியத்தைப் பார்க்கின்றனர்.)**

**அறிவழகன்:** அப்பா! இந்த ஓவியத்தில் அரசன் மயிலுக்குப் போர்வை போர்த்துகிறாரே! ஏன் அப்படிச் செய்கிறார்?

**தந்தை:** அவர் பெயர் பேகன். சங்ககாலத்தில் புகழ்பெற்ற வள்ளல்!

**தமிழினி:** மயிலுக்கே போர்வை கொடுக்கிறாரா?

**தந்தை:** ஆம்! ஒருமுறை மலைப்பகுதியில் மழை மற்றும் குளிர் அதிகமாக இருந்தது. அப்போது ஒரு மயில் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது.

**அறிவழகன்:** அதைப் பார்த்து அரசன் என்ன செய்தார்?

**தந்தை:** அந்த மயிலின் நிலையைப் பார்த்துப் பேகனின் மனம் உருகிவிட்டது. உடனே தன்னிடம் இருந்த போர்வையை எடுத்து மயிலுக்குப் போர்த்தினார்.

**தமிழினி:** அது ஒரு பறவை தானே! அதன் மீது இவ்வளவு அன்பா?

**தந்தை:** அதுதான், அரசன் பேகனின் கருணை! மனிதர்களுக்கு மட்டுமல்ல, உயிருள்ள எல்லா உயிர்களுக்கும் அவர் அன்பு காட்டினார்.

**அறிவழகன்:** அதனால் தான் அவரை வள்ளல் என்று சொல்கிறார்களா?

**தந்தை:** ஆமாம். பாரி, ஓரி, காரி போன்ற அரசர்கள் தங்கள் கருணை, அன்பின் காரணமாக சங்க இலக்கியங்களில் புகழப்பட்டனர்.

**தமிழினி:** அப்பா, உயிர்களுக்கு அன்பு காட்ட வேண்டும் என்பதை இந்த ஓவியம் நமக்குக் கற்பிக்கிறதே!

**தந்தை:** மிகவும் சரி! எல்லா உயிர்களையும் நேசிப்பது தான் மனிதனின் கடமை.

**அறிவழகன்:** நானும் வளர்ந்தபின் கடையெழு வள்ளல் போல் வள்ளல் தன்மையுடன் வாழ்வேன்.

**(மூவரும் சிரித்துக்கொண்டே சங்கத்தமிழ்க் காட்சிக்கூடத்தில் இருந்து வெளியில் வந்தனர்.)**

# சிந்திப்போம்! செயல்படுவோம்!



- **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. சங்கத்தமிழ்க் காட்சிக் கூடத்திற்குச் சென்றவர்கள் யார்? யார்?
2. ஔவையாருக்கு அதியமான் என்ன அளித்தார்?
3. கடையெழு வள்ளல்கள் யார் யார் எனக் கூறவும்.
4. வள்ளல் என்ற சொல்லின் பொருளைக் கூறவும்.
5. அதியமான் மன்னர் எப்படிப்பட்டவர் அவருடைய குண நலன்களை பற்றி கூறவும்.

- **யார் யாரிடம் கூறியது? என எழுதவும்.**

1. அந்தப் பாட்டி யாரப்பா ?
2. அவர் பெயர் பேகன். சங்க காலத்தில் புகழ்பெற்ற மன்னர்.
3. அப்படியானால் அரசனே சாப்பிடலாமே.

- **கீழேத் தரப்பட்டுள்ள முழக்க வாக்கியங்களில் விடுபட்ட சொற்களை நிரப்பவும்.**



- **பொருத்தமான பதிலிப் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இரமணி இராமனின் தங்கை. ____________ சத்தமாகப் பாடினாள். (அவன் / அவள் / அது)
2. பாபு எனது நண்பன். ____________ தினமும் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்வான். (நான் / நீ / அவன்)
3. மாணவர்கள் விளையாட்டுத் திடலில் விளையாடினார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு ____________ வரிசையாக வகுப்பிற்குத் திரும்பினர். (அவை / அவர்கள் / அவைகள்)

## சிந்தித்து எழுதுக

★ பேகன் எப்படிப்பட்ட வள்ளல்?

★ வள்ளல்கள் செய்த உதவிகள் மூலம் நாம் அறிவது யாது ?

## குழுச் செயல்பாடு

★ இந்த நாடகத்தை வகுப்பில் நண்பர்களுடன் நடித்துக் காட்டுக.

# மொழியை அறிவோம்

- **உரையாடலை வாசிப்போம்**

**சேகர்:** மாலா நீ என்ன செய்கிறாய்?

**மாலா:** நான் புத்தகம் வாசிக்கிறேன்.

**சேகர்:** உன் தங்கை சீதா எங்கே?

**மாலா:** அவள் விளையாடச் சென்றுள்ளாள்.

**சேகர்:** உன்னுடைய அம்மா எங்கே?

**மாலா:** அவர்கள் கடைக்குச் சென்றுள்ளார்கள்.

**சேகர்:** எனக்குக் குடிக்க தண்ணீர் வேண்டும்.

**மாலா:** இதோ, தருகிறேன். எங்கள் வீட்டில் தின்பண்டங்களும் இருக்கின்றன. கொஞ்சம் தரட்டுமா?

**சேகர்:** வேண்டுமானால் அப்புறம் கேட்கிறேன்.

## மேற்கண்ட உரையாடலை உற்று கவனியுங்கள்.

பெயர்ச்சொற்களுக்குப் பதிலாக நீ, நான், உன், அவன், உன்னுடைய, அவர்கள், எங்கள் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.இவை மூவிடங்களான தன்மை, முன்னிலை, படர்க்கை இவற்றைப் பொறுத்து வேறுபடும்.

| இடம் | பதிலிப் பெயர்ச்சொற்கள் |
| --- | --- |
| தன்மை | நான், நாங்கள் |
| முன்னிலை | நீ, நீங்கள் |
| படர்க்கை | அவன், அவள், அது, அவை, அவர்கள் |

- **பொருத்தமான மூவிடப் பெயர்களைக் கொண்டுப் பத்தியை நிரப்புக.**

**(அவர்கள், நான், அவன், நீயும், நீங்கள்)**

----- நேற்று மாலை மைதானத்திற்குச் சென்றேன். அங்கே நண்பர்களைப் பார்த்தேன்.----- மட்டைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். என் நண்பனிடம் பேச சென்றேன்.----- விளையாடுகிறாயா? என்று ----- கேட்டான்.----- விளையாடுங்கள்----- வரவில்லை என்று கூறிவிட்டேன்.

- **பத்தியை வாசித்து சுருக்கி எழுதவும்.**

உலகில் எந்த ஆறும் தனது தாகத்திற்காக ஓடுவதில்லை. எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை. எந்த மரமும் தனக்காக கனிகளை உருவாக்குவதில்லை. இவற்றைப்போல மனிதனும் தனக்கென வாழாமல் பிறருக்கென வாழவேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு அருள், பொறுமை, பரிவு, நன்றியுணர்வு, இன்சொல் பேசுதல் போன்ற குணங்கள் தேவை. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே, மனிதநேயம் ஆகும். மனிதநேயத்துடன் வாழ்பவர்களால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

# ஐந்தில் வளையும்



ஆரோக் ஆண்டுதோறும் கோடை விடுமுறைக்கு சிவந்தி வனத்தில் உள்ள தனது தாத்தாவின் வீட்டிற்கு செல்வது வழக்கம் அவனுக்குத் தன் தாத்தாவின் அருகாமை மிகவும் பிடிக்கும் ஏனெனில் அவர் கிராமத்தில் உள்ள கோவில், வயல்,குளம், குளத்திற்கு அருகில் உள்ள மரம்.

செடி, கொடிகளையும் அவற்றின் சிறப்புகளையும் பழமைகளையும் எடுத்துக் கூறுவார் அவற்றோடு மனித வாழ்வின் இயல்புகளையும் குணங்களையும் ஒப்புமைப்படுத்தி ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கூறுவார்.

ஒரு முறை அவன் தாத்தாவோடு மாலையில் குளக்கரையில் உலாவச் செல்லும் பொழுது, தாத்தா அங்குள்ள செடிகளை, மரங்களை சிறப்பித்துக் கூறினார். அன்று ஒரு சிறு செடியை காண்பித்து,' ஆரோக் இந்த செடியை உன்னால் வேரோடு பிடுங்க முடியுமா? என்று கேட்டார். அவன் சிரித்துக் கொண்டே, 'தாத்தா நான் எளிதில் பிடுங்கி விடுவேன்' என்றான். அதனை விட பெரிய செடியை காண்பித்து இதைப் பிடுங்க விடுவாயா என்று கேட்டார். 'ஏன் எளிதாக பிடுங்கி விடுவேன் என்றான். சிறு தூரம் சென்ற பின் ஒரு பெரிய செடியைக் காண்பித்து,' இதை வேரோடு பிடுங்கி விடுவாயா? என வினவினார். ''தாத்தா! ச ற்றே சிரமம் தான், ஆனால் பிடுங்கி விடுவேன்'' என்றான். இறுதியாக ஒரு பெரிய மரத்தைக் காண்பித்து, ''நீ இதனை வேரோடு பிடுங்கி விடுவாயா?'' என்று கேட்டார். தாத்தா! எப்படி முடியும்? இதன் வேர் எவ்வளவு ஆழமாக பரந்து பூமிக்குள் சென்றிருக்கும். முடியாது...'' என்றான். ''இதேபோலத் தான் குழந்தைகளிடம் ஒட்டிக் கொள்ளும் தீய பழக்கங்களும். அது சிறியதாக இருக்கும் போ தே அதனை விட்டு விட வேண்டும். இல்லாவிடில் இந்த மரம் போல் ஆழமாக வேரூன்றி விட்டு, விட முடியாதபடி துன்பம் தரும். எனவே, ''வாழ்க்கையில் கவனமாக இருக்க வேண்டும்'' என்றார்.

★★★★★★★★★★★★★★★

# சொல் அகராதி



| | | | |
|---|---|---|---|
| 1 | அஞ்சல் = கடிதம் | 15 | கட்டளை = ஆணை |
| 2 | அஞ்சினான் = பயந்தான் | 16 | கத்தியது = உரத்த சத்தமிட்டது |
| 3 | அற்புதம் = அதிசயம் | 17 | கர்வம் = தற்பெருமை |
| 4 | ஆக்கம் = உருவாக்கம் | 18 | கனவு = சொப்பனம் |
| 5 | ஆன்ற = சிறந்த | 19 | கனிவு = இரக்கம் |
| 6 | ஆன்றோர் = அறிவில் சிறந்தோர் | 20 | கருணை = இரக்கம் |
| 7 | ஆதவன் = சூரியன் | 21 | கானவர் = வேடர் |
| 8 | ஆணை = கட்டளை | 22 | குழுமம் = கூட்டமைப்பு |
| 9 | இலட்சியம் = குறிக்கோள் | 23 | குறுங்கதை = சிறுகதை |
| 10 | ஈந்து = கொடுத்து | 24 | கெட்டியாக = உறுதியாக |
| 11 | உண்டியில் = கவண் | 25 | சிறந்த = ஆன்ற |
| 12 | ஊக்கம் = முயற்சி | 26 | சித்திரம் = ஓவியம் |
| 13 | ஊடகம் = தகவல் பரப்பும் சாதனம் | 27 | சுழன்றது = சுற்றியது |
| 14 | எஞ்சிய = மீதமான | 28 | செங்கதிரோன் = சூரியன் |

| | | | |
|---|---|---|---|
| 29 | சேறு = சகதி | 51 | பாரம்பரியம் = தொன்றுதொட்டு |
| 30 | ஞாலம் = உலகம் | 52 | பிணைப்பு = நெருக்கம் |
| 31 | தடை = கட்டுப்பாடு | 53 | பேதையர் = அறிவில்லாதவர் |
| 32 | தியாகம் = தன்னலமற்ற | 54 | பேரங்காடி = பெரியகடை |
| 33 | திரை = அலை | 55 | பொலிவு = அழகு |
| 34 | துகில் = துணி | 56 | மடல் = கடிதம் |
| 35 | துணைவி = மனைவி | 57 | மந்தி = பெண் குரங்கு |
| 36 | துவஜம் = கொடி | 58 | மரபுச்சொல் = பாரம்பரியச்சொல் |
| 37 | தொண்டு = தன்னலமற்றச் செயல் | 59 | மானுடம் = மனிதஇனம் |
| 38 | நந்தவனம் = பூந்தோட்டம் | 60 | மிகுதி = அதிகம் |
| 39 | நயம் = அழகு | 61 | மேனி = உடல் |
| 40 | நல்லிணக்கம் = நல்லுறவு | 62 | மைதானம் = விளையாடும் இடம் |
| 41 | நவீன = புதிய | 63 | வரப்பு = கரை |
| 42 | நாயகன் = தலைவன் | 64 | வரை = மலை |
| 43 | நானிலம் = உலகம் | 65 | வலிமை = உறுதி |
| 44 | நுண்கதை = மிகச்சிறிய கதை | 66 | வானரம் = குரங்கு |
| 45 | நேயம் = அன்பு | 67 | விதிமுறை = ஒழுங்குமுறை |
| 46 | நோக்கம் = குறிக்கோள் | 68 | விந்தை = வியப்பு |
| 47 | பகிர்ந்து = பங்கிட்டு | 69 | விருது = பரிசு |
| 48 | பணயம் = அடமானம் | 70 | வீர தீர = துணிவுமிக்க |
| 49 | பரி = குதிரை | 71 | வேணி = பின்னல் |
| 50 | பறைசாற்றியது = அறிவித்தது | | |

அன்பு குழந்தைகளே!

யாராவது ஒருவர் உங்களை தகாத றையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்கக் கூடாது. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.

1. உங்களை நீங்களே குற்றம் சொல்லாதீர்கள்.
2. நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.
3. நீங்கள் போக்சோ மின் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கும் தெரிவிக்கலாம்.

நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.
நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை, ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.




இந்த பொத்தானை அழுத்தவும்.

**POCSO e-box ncpcr@gov.in–ல் கிடைக்கும்**

நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற றையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக் கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால்...




துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்யற்சியாகும்.

नए समाज की ओर
Towards a new dawn

- மாணவர்களுக்கு நல்ல தொடுதல் - கெட்ட தொடுதலை அடையாளம் காண அவர்களின் வயது, உடல் மற்றும் உர்ணவுக்கு ஏற்ப வழிகாட்டுதல் தரவும்.

# राज्यगीत



जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।



काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।




महाराष्ट्र राज्य पाठ्यपुस्तक निर्मिती व अभ्यासक्रम संशोधन मंडळ

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே.

बालभारती इयत्ता सहावी (तमिळ माध्यम)

₹ 78.00